# விவேக போதினி

" எப்பொருளெத் தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்

தொகுதி VIII { ராக்ஷஸஹு பங்குனிமீ : 1916-ஹு ஏப்ரல்மீ } பகுதி 10


## பழமொழிப் போதம்

### PROVERBS EXPLAINED

'பரிப்பவனே காவடியின் பார மறிவான்'
உரைத்த வெளிமையல் ஒருவா—திரித்ததனால்
பன்னு முமூட்சுத்தன் பாற்றேன் றுடனுலகை
இன்னலுரு வென்றுணர்வா னே. (66)

'தேரை நீரினுக் கோதி திடர்க்குறல்'
ஏரு றுஞ்சுப விச்சைகந் செந்நெறிக்
கீர நெஞ்சை யிழிந்தமுன் வாசனை
நேருந் தீய நெறிக்கண் கவர்தலே. (67)

'உடையா ரிலாநாய் சந்தைபுகின் உண்ணுந்துலைக்
கோல் மொத்'தெங்கும், முடியாப் பரானு பூதியுறு
முத்தி வேட்கையுள்ளந்தான், விடலா விவகா ரங்க
ளூறின் மேவு போகத் தாவிடரே, படுமாற் பிரம
பாவனையிற் பயிலாத் தெளிவில் பார்வையினே. (68)

துரிசுற்ற பெத்தர்க் கறியாமை யால்வருந் துன்ப
மென்றும், திரமுத்திதன்னை விழைந்தவர்க் குண்மை
திகழ்வளவும், வருமிட் டளமறி யாமையி னுற்குறை
வாமறிவால், 'உரலுக் கொருபால் முழவிற் கிரு
பால் உளவிடியே.' (69)

நல்ல நகருக்கு நாத்திகர் கேடுசெய்
வல்லர் மனுதிக்கு மைக்கந் பனைவழிச்
செல்ல விடுதல் சிதைக்கு மறிவெலாம்
'கொல்லைக்குப் பல்லி குடிக்குச் சகுனியே.' (70)

'அடுக்கும் அருமை உடைக்கு மார்ச்சாலம் அறி
வதில்லை', எடுக்கு மறிஞரைச் சார்ந்தும் மனத்தை
யிழுத்துமொருப், படுக்கும் தெளிவை யிழிவா சனை
யாம் பசாசுகளே, கெடுக்கும் அதனுற் றிடவா சனை
நனி கிட்டுகவே. (71)

வலிமு மூட்சுக்கள் வல்லையின் முத்தியாம்
பலசு கத்தைப் பதிபந்த மொன்றிமே
விலர்க ளேனும் இயையார் விடயமால்
புலிப சிப்பினும் புற்கறி யா'வரோ. (72)

'அழுதாலுஞ் சேயை யவளே பயப்பள்'
முழுவாதை யுற்று முமூட்சுப்—பழகித்
தனதிடத்து நின்றே சதானந்த ஞான
அனுபவத்தை யுற்றிடுவ னால். (73)

'காலிற் சுற்றிய கட்செவி கடித்திடா தொழியா'
சாலச் சிந்தையி னெழுந்தொழி யாதுள தகைமை
மேலைத் தத்துவ முத்திவேட் பாரியன் மெய்ந்நூல்
மூலத் தாற்பர விசாரஞா னந்தரும் முறையே. (74)

'நாள் செய்வது நல்லவர் செய்யார்,'
மூள் வெந்துயர் முச்சக மென்றுள்
மீள்போதினில் மேவும் விசாரக்
கோள்போல்வ கொடார்நிலை மேலோர். (75)

'நகச்சொல் வார்கெடுப்பார் அழச்சொல்பவர் நன்கே
மிகச்செய் வார்' விட யஞ்சுக மெனத்தெரிவிக்கும்
சகத்துப் பந்தமும் விடயம்யா வையுமிடர் தானு
நிகழ்த்து ஞான்றுமுத்தியுந்தரும் ஏதுவா நினைவார்.

அற்றமில் முத்தி விருப்பினர் தன்னுடை யனுபூதி
முற்றுமறைப்பற வாரியன் முன்சொலின் முறையாக
நிற்றலில் கற்பித பேத மறச்சிவ நிலைபெற்றார்
'உற்ற துரைத்திடி னற்ற திசைந்திடு முலகிற்கே.' ()

பற்று முடம்பக மன்றெதி ரிப்பிர பஞ்சம்பொய்,
தெற்றென விங்ஙன் விளக்கி விளங்கிய சித்தேயான்,
எற்றையுமென் றுளமெண்ணிடி னப்பொரு ளினிதொ
'உற்றதுரைத்திடினற்றதிசைந்திடுமுலகிற்கே'. [ன்றும்

# நளவருஷ ஆனிமீ CALENDAR—பஞ்சாங்கம்

| யோ | தஉ | இங் | தமிழ் | வார | நளவருஷ ஆனிமீ { சாலிவாகன 1838 கலியுகாதி 5017 பசலி 1325 கொல்லம் 1091 { ஹிஜரி 1334 } 1916வருஷ ஜூன்மீ ஜூலைமீ |
|---|---|---|---|---|---|
| புசு | 12 | 14 | 1 | புத | திர 6-11, அனு 51-11, சித் 21-14, தை 6-11, திவி 3-39, அக 31-34, ரோ 1, ரிசு புத 32-52, சுக்ரவக்ரம் 40-10, சூன்யதிதி ஷடசீதி கரிநாள் ஸமார்கம். |
| | 13 | 15 | 2 | வியா | சது 0-56, ○ பௌ 54-20, கேட் 47-29, சா 14-16, வணி 0-56, திவி 4-19, சூன்யதிதி வடஸா பூர் பௌச் ம. |
| | 14 | 16 | 3 | வெ | பிர 49-13, மூல 43-29, சுப 7-0, சுப் 52-28, பா 22-14, திவி 6-9, ரா 7-55, ஜேஷ்ட பகுமிது கிபிரதமாதிதி இஷ்டி. |
| ரசெ | 15 | 17 | 4 | சனி | துதி 43-5, பூரா 39-23, பிரா 51-52, தை 16-9, திவி 5-51, ரா 26-29, மிரு 4, ரவி 2-27, பூர 2, செ 46-26, ரோ 2, புத 34-19. |
| பு]சு | 16 | 18 | 5 | ஞா | திரு 37-4, உத்தி 35-22, மா 44-23 வணி 10-4, சே 2-3, ரா 13-10, அக 31-36, பச்சாதஸ்தசனி 18-10, சங் சது. |
| | 17 | 19 | 6 | திங் | சது 31-21 திரு 31-39, வை 37-11, பவ 4-12, ரா 9-31, வை சிரா சிர உப கரிநாள் மழை 3-க்குள். |
| ரபு | 18 | 20 | 7 | செ | பஞ் 26-3, அவி 28-20, விஷ் 30-20, தை 26-3, ரா 13-57, திரு 1, ரவி 51-59, ரோ 3, புத 44-0, பஞ்சமிதிதி. |
| | 19 | 21 | 8 | புத | சஷ் 21-24, சத 25-42, பிரி 24-0, வணி 21-24, ரா 9-37, திதித்வயம். |
| | 20 | 22 | 9 | வியா | சப் 17-34, பூரட் 23-53, ஆயு 18-30, பவ 17-34, ரா 15-57, அக 31-36, கடகாய 27-33, அஷ்டமிதிதி காளாஷ்ட. |
| பு | 21 | 23 | 10 | வெ | அஷ் 14-51, உத் 23-4, ஸௌ 13-35, கௌ 14-51, ரா 21-37, ரோ 4, புத 25-0. |
| ரசெ | 22 | 24 | 11 | சனி | நவ 12-55, ரே 23-23, சோ 9-43, கர 12-55, தியா—0—0 திரு 2, ரவி 31-3, பூர 3, செ 5-50. |
| சு | 23 | 25 | 12 | ஞா | தச 12-25, அசு 24-53, அதி 6-43, பத் 12-25, திவி 14-38, ரா 18-24, புன 4, வக்சுக் 14-15. |
| பு | 24 | 26 | 13 | திங் | ஏகா 13-10, பர 27-41, சுக 4-46, பா 13-10, ரா 28-1, அக 31-38, மிரு 1, புத 4-0, சர்வ ஏகா. |
| குரா | 25 | 27 | 14 | செ | துவா 15-12, * கார் 31-38, திரு 3-53, தை 15-12, சே 3-39, அசு 3, குரு 15-54, உத்தி 3, ரா பூச 1, கே 23.26, திரயோதிதி கார் உப பிரதோ. [மிரு 2; புத 17-25, சதுர்த்தசிதிதி மா சி. |
| ரபு | 26 | 28 | 15 | புத | திர 18-19, ரோ 36-40, சூல 3-49, வணி 18-19, திவி 14-59, ரா 20-23, திரு 3, ரவி 1-57, |
| | 27 | 29 | 16 | வியா | சது 22-23, மிரு 42-27, கண் 4-35, சகு 22-23, தியா—0—0 அதிதி மழை 9-க்குள். |
| பு | 28 | 30 | 17 | வெ | ● அமா 27-0, திரு 48-46, விர் 5-49, நா 27-0, திவி 5-40, அக 31-38 மிதுனபுத 32-30, அமாதிதி சர்வ அமா. [பூர 4, செ 11-7, இஷ்டி. |
| ரசெ | 29 | 1 | 18 | சனி | பிர 31-55, புன 55-15, துரு 7-24, பவ 31-55, திவி 22-0, ஆஷா சுத் திரு 4, ரவி 32-51, |
| புசு | 30 | 2 | 19 | ஞா | துதி 36-47, பூச 60-0, வியா 8-50, பா 4-21, திவி 17-18, மிரு 4, புத 44-30, மிதுனவக்சுக் 6-29, பச்சாதஸ்தசுக் 40-10, சங் தரி. |
| சு | 1 | 3 | 20 | திங் | திரு 40-52, பூச 1-24, ஹர் 10-14 தை 8-49, ரா 4-41, புன 2, சனி 35-15. |
| பு | 2 | 4 | 21 | செ | சது 44-17, ஆயி 6-51, வஜ் 10-55, வணி 12-34, ரா 7-33, அக 31-36, திரு 1, புத 45-5, சது விரு. |
| ர | 3 | 5 | 22 | புத | பஞ் 46-37, மக 11-27, ஸித் 10-56, பவ 15-27, ரா 1-0, புன 1, ரவி 3-23, விய சிரா மழை 5-க்குள். |
| பு | 4 | 6 | 23 | வியா | சஷ் 47-42, பூர 14-55, விய 10-0, கௌ 17-9, ரா 1-59, திரு 2, புத 50-10, சஷ் உப குமாரஷஷ்டி சமீ கௌ. |
| செசு | 5 | 7 | 24 | வெ | சப் 47-30, உத்தி 17-8, வரி 8-5, கர 17-36, ரா 7-54, உத் 1. செ 5-7, புன 2, வக்சுக் 33-0, சப் விரு. |
| ர-பு | 6 | 8 | 25 | சனி | அஷ் 46-2, அஸ் 18-7, பரி 5-10, பத் 16 46, ரா 6-28, அக 31-35, புன 2, ரவி 23-54, திரு 3, புத 51-3. [இல்ல. |
| பு | 7 | 9 | 26 | ஞா | நவ 43-26, சித் 17-55, சிவ 1-16, சித் 55-14, பா 14-44, ரா 0-2, பிராகஸ்தபுத 26.10, சில விடங்களில் ஜலத்தினால் கெடுதி |
| புசு | 8 | 10 | 27 | திங் | தச 39-49, சுவா 16.39, சா 50-50, தை 11-37, திவி 30-8, திரு 4, புத 42-15, புன 1, வக்சுக் 11-0 சாக்ஷு ம. |
| | 9 | 11 | 28 | செ | ஏகா 35-19, விசா 14-27, சுப 44-28, வணி 7-34, திவி 23-47, சர்வ ஏகா சயன ஏ கோபத்ம வி. |
| ரசெ | 10 | 12 | 29 | புத | துவா 30-9, அனு 11-30, சுப் 37-37, பவ 2-44, திவி 24-41, அக 31-33, புன 3, ரவி 4-26, கன்னிசெ 59-0, புன 1, புத 35-17, பிராகுதயசுக் 40.10, துவாதிதி பிரதோ. |
| புசு] | 11 | 13 | 30 | வியா | திர 24-31, கேட் 7-59, பிரா 30-23, தை 24-31, திவி 26-41, திதித்வயம் மழை 10-க்குள். |
| பு | 12 | 14 | 31 | வெ | சது 18-33, மூல 4-6, பூரா 55-37, மா 22-55, வணி 18-33, திவி 0-6, திவி 26-21, புன 2, புத 29-42, மிது சு பூர்ணிமாதிதி வை சிரா. [வியாஸ பூ அக்னி ம இஷ்டி ஆ கா மா வை. |
| ர | 13 | 15 | 32 | சனி | ○ பௌ 12-29. உத்தி 55-59, வை 15-23, பவ 12-29, திவி 15-44, கடகரவி 35-32, அதிதி தக்ஷிணாயனம் |

| | குரு | புத | ரவி சனி |
|---|---|---|---|
| | | 17 மிது பு 19 மிது வக் சுக் 20கன் செ | சுக் கேது |
| ராகு | | | செ |
| | | | |

விவேக போதினி

தொ. 8] ராக்ஷஸஹு பங்குனிமீ [பகுதி.10

# மோக்ஷ ஸோபாநம்

## THE STEPS TO THE GOAL

ராஜயோகம் (ஆராய்ச்சி)

### உத்க்ராந்தி விவரம்

உத்க்ராந்தி அவஸ்தைத் தொடக்கத்தில் ஹ்ருதயத்தில் ஸூக்ஷ்மமாக வந்து சேர்ந்துள்ள வித்யா கர்ம வாஸனைகளால் சூழப்பட்ட ஜீவன், கர்மஜ சரீரங்கள் மூன்றில் ஏதாவதொன்றைப்பற்றி முன் தேஹத்தை விட்டு உடலில் உள்ள ஏதாவது ஒரு துவாரத்தின் வழி வெளிப்படுவன். பொதுவாக எல்லோரும், வாயவிய சரீரம்பெற்று வாய் முதல் கீழ்ப்பட்ட துவாரங்கள் மயிர்க்கால்கள் வழியாக நரகம்போக வெளி ஏறலாம். சிலர் ஜலீயசரீரம் பெற்று கண் காதுகள் வழியாக பிதிர்லோகம் போக வெளிப்படலாம். அபூர்வமாகச் சிலர் ஆக்நேய சரீரம் பெற்று உச்சி மண்டையை உடைத்துக்கொண்டு ஸ்வர்க்காதி ஸத்யலோகம் வரையில் போக வெளி ஏறலாம். லோகாந்தரமே போகாது மறுபடி இங்கு பிறக்கத் தயாராகிவிடுபவர்கள் சுற்றுமுள்ள ஆவி நீர்த்துளிகளைப்பற்றி இங்கேயே பிறக்கும்படி யாகலாம்; தற்கொலை, கற்றதை அஸூயையால் ஒருவனுக்குக்கூட எடுத்துரையாமை முதலிய கொடிய பாபம் செய்தவர்கள் இறந்ததும் வாயவிய சரீரம் பெற்று இங்கேயே வெகுகாலம் திண்டாடிப் பலருக்கும் இடையூறாகவுள்ள பிசாசுகளாகவிருந்து முடிவில் நரகம்போகத் தயாராகலாம், மேன்மேலும் திண்டாடி மண்டை கலங்க. இவ்வாறு உத்க்ராந்தி அவஸ்தைக்குப் பின் மூன்றவஸ்தை ஜீவர்களுக்கு உண்டென்பதைப் பகவான் கீதை XV-ம் அத்யாயம் 10-ம் ச்லோகத்தில்:—

"செல்பொழுதும் செல்லா திருக்கையிலும் சேர் குணத்தைப்; புல்லினுய் ஒன்றைப் புசிக்கையிலும் —சொல்லவனை; உற்றுணரார் பேதையர்கள் ஓங்கறிவாம் உள்விழியைப்; பெற்றவரே காண்பார் பெரிது.

என விளக்கிக்காட்டியிருக்கிறார். இதில் செல்பொழுது என்பது லோகாந்தரம் போதலையும் செல்லாதிருக்கையில் என்பது முன் பிறவியிலோ அல்லது உடனே ஏற்படக்கூடிய பிறவியிலோ இருந்து அனுபவித்தலையும், புல்லினுய் ஒன்றைப் புசித்தல் என்பது லோகாந்தரமும் போகாமல், மறு பிறவியையும் அடையாமல் இடையில் வாயவிய சரீரம் பெற்றுப் பிசாசாகித் துக்கங்களை விடாது அனுபவித்தலையும் குறிக்கும். இங்கு அறிவு விழிபெற்றோர் என்பது ஞானிகளான முக்தர்களைக் குறிப்பதே அல்ல, திவ்ய நேத்ர ஸித்திபெற்ற ஸாதாரண ஹடயோகிகளையும், அடுத்த ச்லோகத்தில் கூறுவதுபோல இந்த ஸித்திக்காக முயலுபவர்களையும் உள்ளடக்கியுள்ளதுதான். இந்த முயற்சியுடன் கூடிய ஸாவித்ரி, ஸத்யவான் ஜீவனைக் கண்டாள். இந்த ஸித்தியே இல்லாதவர்கள் பெரியோர்கள் அனுக்ரஹத்தால் ஏற்படும் தத்கால திவ்ய நேத்திர ஸித்தியால் ஜீவன் நிலையையும், லோகாந்தரத்தில் ஜீவன் இருக்கும் நிலையையும், ஈசன் இவைகளுள்ளிருப்

பதையும் கண்டுகொள்ளும் திறனையடைய லாம். இப்படித்தான் இறந்த உறவினர்கள் தேஹத்தை வ்யாஸரது அநுக்ரஹத்தால் திருதிராஷ்டிரன் முதலியோர் கண்டதும், பகவான் கிருஷ்ணனது அநுக்ரஹத்தால், அர்ச்சுன திருதிராஷ்டிரர்கள் அவரது விச்வரூபத்தைக் கண்டதும் எனப் புராணங்கள் கூறும்.

இவ்வாறுவெளிஏறும் ஜீவர்களில்பெரும் பாலாரும் தூக்கம்போன்ற மயக்க நிலையை அடைந்து உள் ப்ரஞ்ஞைகூட யில்லாது முற்றிலும் அற்றுத்தான் தேஹத்தை விட்டு வெளி ஏறுவர். இவர்களுக்கு மரண உத்க்ராந்திகள் விழிப்புப்போன்ற அவஸ்தையில் வந்து மயக்கத்தில் அழுத்தி முடிவு பெறுவதால், இவர்களிடம் வர[illegible]ர மரணபயம் பலமாகப் பதிந்துகொண்டேதான் வரும். ஆனல் ஆக்நேய சரீரம் பெறுபவர்களுக்கு மாத்திரம் வாழ்நாட்களிலேயே ஈச்வர உபாஸனு பலம் இருப்பதால், இந்திரியங்களை அடக்கி தூக்க நிலைக்குப்போக வொட்டாது மனதை உள்ளுணர்வான ஈச்வர ப்ரஞ்ஞையுடன் மூளையிலேயே நிறுத்தும் ஆற்றலிருக்கும். மரணகாலத்திலும் இவர்கள் ஹ்ருதயத்திற்கு வரும் ஜீவனை அப்படி ஸுஷுப்தி போன்ற அவஸ்தையில் கர்மஜ சரீரத்தைப் பற்றவொட்டாது, தம்முயற்சி பூர்வகமாகப் பாடுபட்டுத்தம் த்யானநிலைக்குப்பழக்கபலத்தையும் முன்னிட்டு மூளையில் ஏற்றி, அங்கு ஜாக்ரத்தில் தமது பழக்க த்யானத்தை உள்ளுணர்வுடன் நிதானமாகச் செய்து, ஆக்நேய சரீரம்பெற்று, முழு ஈச்வரஉணர்வுடன் உச்சந்தலையைப் பிளந்துகொண்டு முன் தேஹத்தை விட்டு வெளிஏறுவர். இதையே பகவான் கிதை VIII அத்யாயம் 12,13-ம் ச்லோகங்களில்:—

வாயில்வழி யாவும் அடைத்து மனம் தன்னைத்
தூய் இருதயத்திருத்தித் துன்னுசிரத்—தேயிருப்ப
ஆவிதனை நன்கமர்த்தி ஆருமொரு யோகநிலை
மேவினனுய் வீற்றிருந்து மேல்

"உத்ற பிரஹ்மம் தனக்கோர் ஒண்பெயராம்
ஓமென்னும், பெற்றி எழுத் தொன்றதனைப் பேசின
னுய்ப்—பற்றியெனைச், சிந்தித்திருந்து தன் தேஹம்
பிடித்தேகுமவன், அந்தமில் பேறெய்தும் அறி.

என்று எடுத்துக் காட்டியிருக்கிருர்.

இங்கு கூறியபடி, முடிவுகாலத்தில் பீஷ்மர் செய்யமுயன்று முடியாது அருகிலிருந்த கிருஷ்ணபகவானைத் துதித்து அவர் அநுக்ரஹத்தின் பேரில் உச்சந்தலை வழி வெளி ஏறினர் என்று பாரதம் கூறும்.

இந்த ஆக்நேய சரீரம் பெறுபவன் ஒழிந்த மற்றையவர்கள் எல்லோரும் மயங்கிக்குழம்பித் தம் ஆற்றலிழந்து அடிபட்டுச் சாவது போலத்தானிறக்கவேண்டும், மரணபயத்தை அதிகப்படுத்திக்கொண்டு. அவனே தேஹத்தை விடும் காலம் வந்திருப்பதை உணர்ந்து கதவைத்திறந்துகொண்டு அபாய ஸமயத்தில் வீட்டைவிட்டு வெளியேறும் நிதானிபோல, வெகு ஸாவதானமாய் தேஹத்தை நழுவவிட்டு மரணபயம் உண்டாகப் பெறுமலே மேல் கதியை அடைவன். இப்படி இறக்கக் கற்றுக்கொண்டு மறுபடி பிறவாமலே யிருப்பதற்குத்தான் பகவான் கர்மகதி வழி ஜீவர்களைத் தொடர்ச்சியாய்ப் பிறந்திறந்து உழலச்செய்வது.

உத்க்ராந்தியடையும் விதங்களை ஜீவர்கள் தன்மைகளுக்கு ஏற்பப் பின் வருமாறு சுருக்கமாகப் பிரித்து விளக்கிக்காட்டலாம்.

(1) நான்கு வர்ணங்களுக்கும் வெளிப்பட்ட ஜீவர்கள்.—இவர்கள் நல்லவர்களாயின், மரணமடைந்ததும் வெளியிலுள்ள ஜலத்துளிகளைப்பற்றி லோகாந்தரம் போகாது இங்கேயே அவைதிக நற்குலப் பிறவியை

அடையத் தயாராவர். இவர்களுக்கு வைதிக தர்மமான வர்ணாச்ரமதர்மம், விக்ரஹ வழிபாடு, கர்மானுஷ்டானம் இவைகளில்பற்று ஏற்பட்டிருந்தால் நாற்பெரும் வருணத்தில் அடங்கிய வைதிகப் பிறவிக்குத் தயாராவர். இவர்களில் கெட்டவர்கள் முன்னவர் போலவே இந்த பிறவிக்கே தயாராவர். கெட்டவர்கள் தமது கெட்ட கர்மாக்களுக்கு ராஜ தண்டனையை ஒழுங்குப்படி அடைந்திருப்பின் அவர்கள் வாஸனவேகப்படி உயர்ந்த அல்லது தாழ்ந்த அவைதிகப் பிறவிக்குத் தயாராவர்; ராஜ தண்டனை அடையாது தப்பித்து இங்கு ஸுகித்துவிட்டார்களாகில், இங்கேயே கிருமி கீடாதி ஜன்மங்களுக்குத் தயாராவர். இவர்கள் மானிடப் பிறவியை அடைவது அரிது. ஆகவே வர்ண பாஹ்யர்களுக்குலோகாந்தரமேஇல்லை; உடனே மறுபிறப்புத்தான்; நரகத்துக்குக்கூட அவர்கள் யோக்யர்களல்லர், மோக்ஷ வாஸனயே இருக்க அவர்கள் பிறவியில் இடமில்லாததால். இதுபற்றியேதானே வைதிகம் நீங்கலான மற்றைய மதஸ்தர்களுள் கர்மலோகாந்தரக் கொள்கைகளே இல்லாமலிருக்கின்றன. மானிடர் ஒழிந்த மற்றைய ஜீவர்கள் கதியும் இதுதான்.

(2) வர்ணத்துள் அகப்பட்ட கெட்ட ஜீவர்கள்.—தமது மோக்ஷ வழிக்கு ஏற்பட்ட வர்ணாச்ரம ஸாமான்ய ஸத்கர்மாக்கள் இன்னவை என்று தெரிந்திருந்தும் அவைகளை அநுஷ்டியாதும், பாபங்களைச் (செய்யக்கூடாதென்று ஈசாஞ்ஞையான வேத சாஸ்திரங்கள் தடுத்தவைகளைச்) செய்தும், இந்திரியங்களைப் பலவாறாக வரம்பு மீறி உபயோகப்படுத்தி, விஷய ஸுகத்தை நுகர்ந்தும் கெட்டு, நல்லெண்ணமும் கெட்ட செய்கையும் உடைய இந்த மோசம்போன ஜீவர்கள் வாயவிய சரீரம் பற்றி தேஹத்தில் வாய் முதலிய கீழ்த் துவாரங்கள் வழியே வெளியேறி யமதூதர்களால் போகும் வழியிலேயே கூறமுடியா வருத்தங்களைப்பெற்று $1\frac{1}{2}$-மணி நேரத்துள் நரகம் புகுவர். இதைத்தான் சாந்தோக்யம் கோணலாம் மூன்றும் வழி என்று கூறும்.

துர்மரணம் என்று கூறப்படும் தற்கொலை செய்துகொள்ளும் மஹாபாபி எந்தவகுப்பில் பிறந்தவனாயினும், இறந்ததும் அதம வாயவிய சரீரம்பெற்று, முன்தேஹத்தில் விட்டுத் தீரவேண்டிய மூச்சுக்களை வெகுமடங்கு மெதுவாக நீடித்துவிட்டு, இவ்வுலகிலேயே படாதபாடெல்லாம் பட்டு, முடிவில் இங்கு தாழ்ந்த கிருமிகீடாதிப் பிறவிக்கோ அல்லது நரகலோக ப்ராப்திக்கோ தயாராவன். இதற்கு நிகரான மனப்பூர்வ வ்யபசாரம் செய்த அஹல்யைக்கும் இப்படிப்பட்ட பிசாச வாயவிய சரீரந்தான் கௌதமர் சாபத்தால் வந்ததேயொழிய அவள் கல்லேயாகவில்லை. இதுபோன்ற வேறு சில பாபிகளுக்கும் பேய் உடல் வந்திடும்.

(2) வர்ணத்துள்ளகப்பட்ட விஷய ஆசையுடைய நல்ல ஜீவர்கள்.—இவர்கள் சாஸ்திரீய கர்மாக்களை விஷய ஸுகம் பெறவேண்டிய ஆசையோடு விடாது அநுஷ்டிக்கும் ஸத்துக்கள். இவர் ஜலீய சரீரம் பெற்றுக், கண் காது முதலிய மேல் துவாரங்களின் வழியே சந்திராதி பிதிர்லோகம் நோக்கிப் போவர். முதலில் இவர்கள் சரீரம், பிண்டாகாரமாக உருவற்றதாக இருந்து முறையே புகை, இரவு, கிருஷ்ணபக்ஷம், தக்ஷிணாயனம் இவைகளது அதிதேவதைகள் லோகம் வழியாகப்போய் வளர்ந்து பின்னர் பிதிர்லோகம் புகும். இதைப் பிதிர்யான மார்க்கம் என்று சாந்தோக்யம் கூறும்.

(3) வர்ணத்துள் அகப்பட்ட விஷய ஆசை அடங்கிவரும் நல்ல ஜீவர்கள்.—இவர்களுக்கு ஈச்வர உபாஸனையான கர்ம பக்தியோகங்கள் பலப்பட்டுவரும். இவர்கள் மத்யம ஆக்னேய சரீரம் பெற்று ஸ்வர்க்கலோகம் வரையில் போவர். இவர்கள் சரீரமும் உருவற்ற ஜ்யோதியாகவே இருக்குமாதலால், வழியில் இச்சரீரம், அக்னி, பகல், சுக்லபக்ஷம், உத்தராயணம் இவைகளது அதிதேவதைகள் லோக வழியாகச் சென்று வளர்ந்து ஸ்வர்க்கம் புகும். இதைத் தெய்வயான மார்க்கம் என்று சாந்தோக்யம் கூறும். தர்மபுத்ரர் பார்த்திவ சரீரத்துடனே ஸ்வர்க்கவாயில் வரை போகும் ஆற்றலுடையவராக இருந்தும், அங்கு ஆகாய கங்கையில் மூழ்கிப், புதிய ஆக்னேய சரீரம் பெற்றே தான் உள்ளே போக வேண்டியிருந்தது.

(4) வர்ணத்துள்ளகப்பட்ட உபாஸனை பலித்த ஸத்ஜீவர்கள்.—இவர்கள் பொதுவாக உத்தம ஆக்னேய சரீரம்பெற்று தெய்வயான மார்க்கமாக ஸூர்யனைத் தாண்டி ப்ரஹ்மலோகம் போவர். இவர்களுள் உபாஸனைக்காக ப்ரபஞ்ச விஷயானுகூலத்தில் சற்றுப் பற்றுடன் போகும் ராகிஸத்துக்கள் மறுபடியும் திரும்பி நல்ல பணக்கார வைதிக ஸாதுக்கள் வீட்டில் பிறக்கத் தயாராவர். ஆனால் விஷய இச்சை முழுதும்போய் உபாஸனைக்கு நோயற்ற வாழ்வு வேண்டுமென்ற பற்றுடன் போகும் ரோகி ஸத்துக்கள் லோகாந்தரம் போகாமலே சிறந்த யோகிகள் குலத்தில் பிறக்கத் தயாராவர். ஒரு பற்றுமில்லாது ஈச்வரப்பற்றுடன் மாத்திரம் இருந்து, இங்கேயே முக்தி பெறாதவர் பிரஹ்மலோகம்போய்த் திரும்பவே மாட்டார்.

(5) கடைசி ஜன்மமெடுக்கும் மஹான்கள்.—இவர்கள் பொதுவாக முன் (4)-ம் வகுப்பில் கூறிய ரோகி உபாஸகர்களாகவாவது அல்லது ராகி உபாஸகர்களாகவாதுதான் இருத்தல்வேண்டும். முடிவான ஜன்மம், ப்ராஹ்மண ஜன்மமாகத்தான் இருக்கவேண்டும். இவர்களுக்கு உயிர் இருக்கையில், முக்தி கைகூடி காரணதேஹம் போய்விடும்:ஸூக்ஷ்மதேஹம் ஒட்டாமலே தள்ளாடிக் கொண்டிருக்கும்: ஸ்தூலதேஹப் பற்றே இராது இவர்களுக்கு மரணாவஸ்தை காலத்தில் ஸ்தூலதேஹம் எரிந்தோ மடிந்தோபோகத் தயாராகும்;ஸூக்ஷ்மதேஹம் பிரிந்து பூதங்களுடன் கூடும்; ஸாத்விகமாக அந்த நான் என்ற ஒளிமழுங்கிய உணர்வு அதனுடன் ஒன்றுகவிருந்த பரம்பொருளே யாகிவிடும். இம்மஹான்களுக்கு கர்மகதியில்லை; மரணாவஸ்தையில்லை; உத்க்ராந்தியும் இல்லை இவர்கள் தேஹம் நழுவுவதற்கு முன்னமே பரம் பொருளேயாகி நிற்கும் முக்தர்களாதலால். இதற்கிசைய ஸ்ரீமத் சங்கரரும் பிறவிகள் சிறப்பைப்பற்றி விவேக சூடாமணியில் பின்வருமாறு கூறுகிறார்:—

ஜீவருக் கிங்கு மாந்தர் சென்மமே யரிதாமத்தின்,
மேவுதற்கரிதாமாண்மை மேவினுமறையோன் றன்மை
யாவதற் கரிதா மத்தை யடைகினும் வேதந்தானே
யோவலற் றேது மார்க்க மொன்றுவ தரிய தாகும்.

அத்தினும் வித்துவானு யமைவதிங் கரிதா மத்தின்,
வித்தர வான்மா னுன்ம விவேகமெத் தரிதேயத்தின்,
சுத்த மானுன மற்றே சொருபமாய் நிற்கு முத்தி
புத்திசே ரனந்த சன்மப் புண்ணிய மன்றி யெய்தா.

இங்கு எடுத்து விவரித்தபடி லோகாந்தரம் போகத்தொடங்கும் ஜீவர்கள் அடையும் லோகாந்தர விசேஷங்களை மேல் எடுத்து விவரிப்போம்.

## இராஜ்ய பரிபாலனம்
## FORMS OF GOVERNMENT

இப்பூமியில் பல தேசங்களிருக்கின்றன. ஒவ்வொரு தேசத்திலும் அத்தேசத்துக்குரிய ஜனங்களும் அஜ்ஜனங்களின் க்ஷேமத்தை நாடி அரசு செலுத்திவரும் அரசாட்சியும் இருப்பது யாவர்க்கும் தெரிந்தவிஷயமே. ஆகவே, நம்மில் ஒவ்வொருவரும் ஒரு அரசாட்சியின் கிழிருந்து அதனாலுண்டாகும் நன்மைகளை அனுபவிப்பதை நாம் நன்குணர்கிறோம். ஆகையினால் இராஜ்ய பரிபாலனம் என்பது எத்தன்மையது, அது எவ்வாறு நடத்தப்பட்டு வருகிறது என்ற விஷயங்களை நாம் அறியவேண்டிய தவசியம்.

இரர்ஜ்ய பரிபாலனம் என்பதை அரசாட்சியென்றும், துரைத்தனம் என்றும் சொல்லலாம். இப்பதங்களி லடங்கிய கருத்தென்ன வென்றால் ஒருதேசத்தில் இராஜநீதி எவ்வாறு செலுத்தப்படுகிற தென்பதேயாம். முதலில், துரைத்தனத்தின் முறை இன்னதென்பதைப் பற்றி நாம் விசாரிப்போம். தற்காலத்தில் பல தேசங்களில் வழங்கும் அரசாட்சி முறைகளை நோக்குங்கால் அவைகளை இரண்டு முக்கியப் பிரிவுகளாகப் பிரிக்கலாம். அவைகளாவன :— (1) தொன்றுதொட்டுவரும் இராஜ வம்சத்திலொருவன் இராஜாங்கக் காரியத்திற்குத் தலைவனாக விருந்து அரசாட்சி செய்வது ஒருமுறை; (2) ஒரு தேசத்துப் பிரஜைகள் ஒன்றுகூடித் தம்மில் ஒருவரை நியமனம் செய்து, அவரைத் தலைவராகக் கொண்டு இராஜாங்கத்தை நடத்துவது மற்றோர் முறை. இத்தகைய அரசாட்சிகளை முறையே ராஜாதிபத்தியம் (Monarchy) என்றும்; பிரஜா பிரபுத்துவம், குடியரசு நாடு (Republic, Common-wealth) என்றும் நாம் சொல்லுகிறோம். அல்லாமலும், இராஜ்யங்களை வேறு விதமாகவும் பிரிக்கலாம். (a) ஒரே ராஜ்யம் (Unitary type) — உதாரணங்கள்: இங்கிலாந்து, பிரான்சு, இதாலிமுதலியவைகள். (b) சேர்ந்த நாடுகள் (Federal type); பலஇராச்சியங்கள் சேர்ந்து தங்களுக்குள் ஓர் உடன்படிக்கை செய்து அதன் பிரகாரம் அரசாட்சி செய்தல்— உதாரணம்: ஸ்விட்ஜர்லாந்து, ஜர்மனி, ஐக்கிய மாகாணங்கள், ஆஸ்திரேலியா, கனடா முதலியன. ஏக இராஜாதிபத்தியத்திலும் கூட அரசன் தன்னிஷ்டப்படி ஒன்றும் செய்யாமல் பிரஜைகளால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் உதவியைக்கொண்டு இராஜ்ய பரிபாலனம்செய்வது காலத்திற்கேற்ற நீதியாயிருக்கிறது. ஏனென்றால் ஒவ்வோரிடத்திலும் நாகரீகம் அதிகரிக்க, போக்குவரவு, கல்வி முதலான விஷயங்களை அபிவிருத்திசெய்ய சாதனங்கள் ஏற்படவே, ஜனங்கள் பல தேசங்களிற்சென்று அத்தேசங்களின் ஜனங்களுடன் கலந்தும், அவ்விடங்களில் பல நாள் வசித்தும், அங்கங்கே இருக்கும்படியான பல தொழில்கள், சாஸ்திரங்கள் இன்னும் பல விதமான நூதன விஷயங்கள் யாவையும் அறிந்து கொள்ளுகிறார்கள். இம்மாதிரி சௌகர்யங்கள் தற்காலத்தில் ஏற்பட்டிருப்பதனால் ஒவ்வொருதேசத்திலும் பலகலைகளைக்கற்றபெரியோர்களும், இராஜாங்க விஷயத்தில் அதிநுட்பமான புத்தியையும், சாமர்த்தியத்தையும் அடைந்த பெரியோர்களும் இருப்பது நாட்டின் அபிவிருத்திக்கு ஒரு நற்குறியே. மேலும் சாதாரண ஜனங்களுக்கும் கூட கல்விப்பயிற்சியும், புத்திவிசாலமும் உண்டாவதால் அவர்களும், அவர் நாட்டில் நடக்கும் பல விஷயங்களையும், இன்னும் அவர்களைச் சுற்றி இருக்கும் நாடுகளில் நடந்துவருகிற பல விஷயங்களையும், செம்மையாக அறிந்து கொள்ளுகிறார்கள். இம்மாதிரி, பிரஜைகளில் புத்திவிசாலம் உண்டாகவே, தாங்கள் அடையும் இப்பேர்ப்பட்ட நன்மைகளுக்குக் காரணமாயுள்ள இராஜாங்கத்தைப்பற்றி மனதில் எண்ணுவதுமல்லாமல் அதைப் பற்றிப் பேசவும் பேசுகிறார்கள். மேலும் அரசாட்சி எவ்வாறு நடத்தப்பட்டுவருகிறதென்பதை அறியவும் விரும்புகிறார்கள். இப்படிப் பிரஜைகள் விரும்ப, இராஜாங்கத்தாரும் அதற்கிணங்கி, அவர்களில் சில பேர்களைத் தங்களோடு சேர்த்துக்கொண்டு அவர்கள் உதவியினால் அரசாட்சியை நடத்திவருகிறார்கள். வம்ச பரம்பரையாக ஒருவன் அரானாகவிருந்து, ஏக ராஜாதிபத்தியம்

செய்தாலும் சரி, குடியரசு நாடானாலும் சரி, முக்கியமாய் இப்பொழுது நடந்தேறிவரும் அரசாட்சிகளில் குடிகளுக்குப் போதுமான மட்டும் ஒரு பாத்தியதை ஏற்பட்டிருக்கிறதை நாம் பார்க்கலாம். அதாவது எல்லா நாடுகளிலும் (Representative Government) குடிகளால் நியமனம் செய்யப்பட்ட சில புத்திமான்கள் அந்தந்த நாட்டுக்குரிய தலைவனோ அல்லது தலைவர்களோ அவர்களுடன் தாங்களும் சேர்ந்து அரசாட்சி செலுத்துகிறார்கள்.

### இராஜாங்கத்தின் பிரிவுகள்
### Departments of Government

ஒவ்வொரு நாட்டிலும் துரைத்தனத்தார் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களாவன :—

(1) குடிகள் இராஜாங்கத்தாருடன் எப்படி நடந்துகொள்ள வேண்டியது;

(2) குடிகளில் ஒருவன் மற்றொருவனுடன் எம்மாதிரி நடந்து கொள்ளவேண்டியது;

(3) பிரஜைகள் க்ஷேமத்தை எப்படி நிலைநிறுத்துவது;

(4) ஒரு தேசத்துப் பிரஜைகள் மற்றொரு தேசத்து ஜனங்களுடன் எப்படி நடந்து கொள்ள வேண்டியது;

(5) இரண்டு இராஜ்யங்கள் ஒன்றுக்கொன்று இருக்கவேண்டிய பரஸ்பர சம்பந்தம்.

மேற்கூறிய விஷயங்களைச் செம்மையாக நடத்த ஒவ்வொரு அரசாட்சியிலும் மூன்று பிரிவுகள் உண்டு. அவையாவன :—

1. முதல் முதல் வேண்டியது சட்டம். ஆகவே, ஒவ்வொருதேசத்திலும் சட்டங்களை ஏற்படுத்த ஒரு அங்கமும்;

2. ஷை சட்ட நிரூபண சபையாரால் ஏற்படுத்திய சட்டங்களை அமுலுக்குக்கொண்டுவர ஒரு அங்கமும்;

3. ஷை சட்டங்களுக்குச் சரியாக ஜனங்கள் கீழ்ப்படிந்து நடக்கிறார்களாவென்பதைக் கவனிப்பதற்கும், அப்படி சட்டப்படி நடக்கிறதில் ஒருவன் மற்றொருவன்பால் ஏதாவது பிசகாக நடக்கிறானா என்று பார்த்துத் தீர்மானம் செய்வதற்கும் ஏற்படுத்தப்பட்ட ஒரு பிரிவும்; ஆகமுறையே (1) தரும சாஸ்திர நிபந்தனைகளை ஏற்படுத்துதல் (Legislative) (2) சட்டங்களை அமுலுக்குக் கொண்டுவருதல் (Executive) அல்லது சட்டப்படிப் பரிபாலனம்செய்தல்; (3) நியாயம் செலுத்துதல் (Judicial) என்ற மூன்று பிரிவுகளை நாம் ஒவ்வொரு தேசத்திலும் காணலாம்.

(தொடரும்.)

E. நரசிம்மன், பி.ஏ., எல்.டி.

---

# நட்சத்திர மண்டலம்
## THE STAR LAND

இக்காலத்து மனிதர்களால் மிகக் கவனத்துடன் விருத்தி செய்யப்படும் அநேக சாஸ்திரங்களில் வானசாஸ்திரம் ஒன்று. இந்த சாஸ்திரத்தை நன்றாய்ப் படித்தறிவதற்கு அதிகப் பொறுமையும், ஊக்கமும் வேண்டும். இரவில், ஆகாயத்தில் காணப்படும் பிரகாசமான சிறிய வஸ்துக்கள் கணக்கில்லாமலிருக்கின்றன. சாதாரணமான வஸ்துக்களைப்பற்றிப் படிப்பதற்காக, அவைகளை உடைத்தும் சுடவைத்தும் தண்ணீர்முதலிய திரவபதார்த்தங்களில் போட்டும் பரீட்சித்துப்பார்ப்பதுபோல், வானத்தில் காணப்படும் நட்சத்திரங்களையும், கிரஹங்களையும் கையால் தொட்டுப் பரீட்சித்துப்பார்க்கமுடியாது. அவைகள் நம்மிடத்திலிருந்து அநேக கோடி மைல்கள் தூரத்திலிருக்கின்றன. ஆகையால் அவைகளின் உருவம், அமைப்பு முதலியவைகளை நாம் தெரிந்து கொள்வது மிகக் கஷ்டம். ஆனால் அவைகள் ஆகாயத்தில் செல்லுவதை நாம் பார்த்திருக்கிறோம். வானசாஸ்திரிகள் இவைகள் நகர்வதைக் கவனித்தே இவைகளைப் பற்றின விஷயங்களை யெல்லாம் கண்டறிந்திருக்கிறார்கள்.


இக்காலத்தில் இவைகளைத் 'தூரதிருஷ்டி'க் கண்ணாடியால் பார்க்கிறார்கள். இந்தக் கண்ணாடியைக் கண்டுபிடித்த காலத்திற்கு அநேக வருஷங்களுக்கு முன்னிருந்தே வானத்திலுள்ள வஸ்துக்களைக் கண்களுக்குத்தெரிந்த மட்டும் கவனித்து, அவைகளைப்பற்றி நம் முன்னோர்கள் தெரிந்துகொண்டுவந்தார்கள்.

(இதன் தொடர்ச்சி 349-ம் பக்கம் பார்க்க.)

இம்மாதிரியாக வான சாஸ்திரத்தை முதல் முதல் மிகக்கற்றறிந்தவர்கள் ஹிந்துக்கள் என்று தெரியவருகிறது. இவர்களுடைய மதவிஷயமான புஸ்தகங்களில் நட்சத்திரங்களைப்பற்றியும், க்ரஹங்களைப் பற்றியுமான விஷயங்கள் குறிப்பிடப்பட்டிருக்கின்றன. வெகுகாலமாக தினங்களையும், நாழிகை முதலிய காலக் கணக்குகளையும் நமது கிரஹ நட்சத்திரங்களின் உதயாஸ்தமனங்களிலிருந்து இவர்கள் கணக்கிட்டு வருகிறார்கள். இப்படியே சீனர்களும், எதிப்தியர்களும் வான சாஸ்திரத்தைப் படித்துவந்தார்களென்று தெரியவருகிறது. க்ரேக்கர்கள் ஹிந்துக்களிடத்திலிருந்து இதைக்கற்றுக்கொண்டு, பிறகு அதிகமாக விருத்தி செய்ததாகத் தெரியவருகிறது. ஆனால் இவ்வித விஷயங்களைப்பற்றி ஒன்றும் நிச்சயமாகச் சொல்லமுடியாது. இப்பொழுது இந்த சாஸ்திரம் நல்ல விருத்தியை அடைந்திருக்கிறது. இருந்தபோதிலும், இதைப் பற்றிக் கொஞ்சங்கூடத் தெரியாதவர்கள் அநேகர் இருக்கிறார்கள். கண்களிருந்தும் இவர்கள் குருடர்களல்லவா?

நமக்கு வெளிச்சத்தைத் தருகிற பெரிய தீபங்களாகிய சூர்யசந்திரர்களை நாம் பார்க்கிறோம். சூர்யன் பகலில் வெளிச்சத்தையும் உஷ்ணத்தையும் தருகிறது. சந்திரன் இரவில் வெளிச்சத்தை மாத்திரம் தருகிறது. சூர்யனை இரவில் நாம் பார்ப்பதில்லை. உண்மையில், சூர்யோதயத்திலிருந்து சூர்யாஸ்தமனம் வரைக்கும் உள்ள நேரத்திற்குப் பகலென்றும், சூர்ய அஸ்தமனத்திலிருந்து அடுத்த சூர்ய உதயம் வரைக்கும் உள்ள நேரத்தை இரவென்றும் சொல்லுகிறோம். சந்திர வெளிச்சம் சூர்ய வெளிச்சத்தைக் காட்டிலும், பிரகாசத்தில் மிகக் குறைந்தது. அல்லாமலும், சந்திர வெளிச்சம் குளிர்ச்சியாயிருக்கிறது. சந்திரன் எல்லா இரவுகளிலும் பிரகாசிப்பதில்லை; சில தினங்களில் இரவு முழுவதும், சில தினங்களில் இரவில் கொஞ்ச நேரம் மாத்திரமும் பிரகாசிக்கின்றது.

இதுபோலவே, சந்திரன் எப்பொழுதும் ஒரே அளவாக நமக்குக் காணப்படவில்லை. நாளுக்கு நாள் வளர்வதாகவும் அல்லது குறைவதாகவும் காணப்படுகின்றது. பௌர்ணமி தினம் நமக்கு முழுச்சந்திரனும் தெரிகிறது; இரவு முழுவதும் பிரகாசிக்கின்றது. அன்று முதல்அமாவாஸ்யை வரையில் சந்திரன் வரவரக் குறைவதாகக் காணப்படுகிறது. அல்லாமலும், அது வரவர நேரம் சென்று உதயமாகிறது. ஆகையால் அதன்



கிரகங்கள்

வெளிச்சமும் முன்னிரவில் இல்லாமல் போகிறது. கடைசியாக, அமாவாஸ்யையன்று இரவில் நமக்குச் சந்திரன் காணப்படுகிறதேயில்லை. ஆகையால் அன்றிரவு சந்திர வெளிச்சமுமில்லை. மறுதினம் முதல், சந்திரன் கொஞ்சம் கொஞ்சமாக வளர்வதுபோல் சாயங்காலத்தில் வானத்தில் காணப்படுகிறது. அதன் வெளிச்சமும் வரவர இரவில் அதிக நேரம் காணப்பட்டு, மறுபடி பௌர்ணமிதினம் இரவு முழுவதும் இருக்கிறது.

இந்த சூர்ய சந்திரர்களைத் தவிர நமக்கு

வெளிச்சம் தருகிற வேறு வஸ்துக்களும் வானத்தில் உண்டு. இவைகள் நட்சத்திரங்களும் கிரஹங்களும். இவைகளை எண்ணிக் கணக்கிடுவது அசாத்தியமென்றே தோன்றுகிறது. நட்சத்திரங்களெல்லாம் மினு மினு என்று பிரகாசிக்கின்றன. சிலவற்றைத் தவிர எல்லா நட்சத்திரங்களும் சிறிய வைரங்கள்பேர்ல் பிரகாசிக்கின்றன. வானத்தில் இச்சிறிய நட்சத்திரங்களுக்கு நடுவில் கொஞ்சம் பெரிதான வஸ்துக்களும் சில சமயங்களில் காணப்படுகின்றன. இவைகள் நம்முடைய கண்ணுக்கு நட்சத்திரங்களைப் போல் காணப்பட்டாலும், அவைகளைப் போல் 'மினு மினு' என்று பிரகாசிக்காமல் ஒளியசையாமல் பிரகாசிக்கின்றன. இப்படிப்பட்ட வஸ்துக்களில் ஒன்று சில காலங்களில் காலை நேரத்தில் கிழக்குத்திசையிலும், சில காலங்களில் மாலை நேரத்தில் மேற்குத் திசையிலும் காணப்படுகிறது. இது ஒரு பெரிய நட்சத்திரம் போலிருக்கும். இதை நாம் சுக்ரன் என்றும், வெள்ளி என்றும் சொல்லுகிறோம். இதைப்போன்றவைதான் கிரஹங்கள். வானத்தில் நட்சத்திரங்கள் நாளுக்கு நாள் கொஞ்சங் கொஞ்சமாக மேற்குத்திசையாக நகர்ந்திருப்பதாகக் காணப்படும்போது, இவைகளின் இடையிலுள்ள இக்கிரஹங்கள் நட்சத்திரங்களோடு கூட நகராமல், அவைகளுக்கு முன்னும் பின்னுமாக நகருகின்றன.

உதாரணமாக, ஒரு கிரஹம் ஒரு நட்சத்திரக்கூட்டத்தின் நடுவில் காணப்பட்டு, அக்கூட்டத்துடன் ஒருநாள் உதித்து அஸ்தமிக்க, பிறகு 10, 15-நாட்கள் கழிந்தவுடன் அக்கூட்டத்தைவிட்டு விலகி கொஞ்சம் கிழக்கில் காணப்படும்; அல்லது மேற்கில் காணப்படும். இம்மாதிரியான முக்கிய கிரஹங்கள் புதன், சுக்ரன், செவ்வாய், வியாழன், சனி, யுரேனஸ், நெப்தியூன். நாமிருக்கும் பூமியும் இவைபோன்ற ஒரு கிரஹந்தான். இவைகளைத்தவிர, வேறு சிறிய கிரஹங்களுமுண்டு. இந்தக் கிரஹங்களெல்லாம் சூர்யனைச் சுற்றுகின்றன. ஒவ்வொன்றும், ஒரு கணக்கான காலத்தில், சூர்யனைச் சுற்றி வருகிறது. இனி இவைகளைப்பற்றித் தனித்தனியாகப் பார்ப்போம்.

## காலஞ்சென்ற ஸ்ரீ ஜி. சுப்பிரமணிய அய்யர்

## THE LATE Mr. G. SUBRAHMANYA AYYAR, B. A.

இந்திய மண்டலத்து நெடுநாளாக உலாவி வந்தசோதி இம்மாதம் அஸ்தமித்தது. வியாதியால் மெலிந்தும், தமது நாட்டின்மேல் வாஞ்சையொழியாது, தன்னுயிரைத் தனது நாட்டிற் கென்றே அர்ப்பணஞ்செய்த சுதேசமித்திரன் பத்திராதிபராகிய ஜி. சுப்பிரமணிய அய்யரவர்கள் தேஹ வியோகமானது, நமது இராஜதானியில் மாத்திரமல்லாமல் இந்திய நாடு முழுதும் வருத்தத்தைக் கொடுக்கும். அவர் கைதேர்ந்த வன்மையர்; பத்திரிகையின் நிலையை ஸ்தாபிக்க நெடுநாள் உழைத்து, இப்பொழுதிங்குலாவும் 'ஹிந்து' என்னும் ஆங்கிலப் பத்திரிகையையும், 'சுதேசமித்திரன்' என உலாவும் தமிழ்ப் பத்திரிகையையும், அத்தகைய பத்திரிகைகளில்லாக் காலத்தில் ஏற்படுத்தி நடத்தி, அவற்றை எல்லாப் பத்திரிகைகளுக்கு முன்னாக முந்தும்படியான நிலைக்குக் கொண்டு வந்தவர். தென்னிந்தியாவில் ஜனங்களைப் புனருஜ்ஜீவனஞ் செய்ய அவரைப்போல உழைத்தவர் தற்காலத்து வேறெவருமில்லை என்று நாம் சொல்லவேண்டிய தாவச்யம். எவ்வாறுழைத்தால் இந்நாட்டை உயர்த்தலாமென்று அவர் இயற்கையால் அடைந்திருந்த அபார புத்தியையும், ஊக்கத்தையும், மெய்ம்மையோடு கூட்டி உபயோகித்தார்; பொதுஜனவாழ்க்கை இத்தன்மையாக இருக்கவேண்டுமென்றுங் காட்டினார்.

ஆங்கிலக் கல்வி நலத்தை முழுதுங்கொண்டு அய்யரவர்கள் இந்தியப் படிப்பின் அபிவிருத்தியில் தமது கவனத்தை முதலிற் செலுத்தினார். 1878-ம் வருஷம் அவர் 'ஹிந்து' பத்திரிகையை ஏற்படுத்தி அதன் பத்திராதிபராக இருந்தார். அடங்கா மனத்தோடும், மனசாட்சிக்குச் சிறிதும் தவறாது, கம்பீரமாக வெளிப்படுத்திய அபிப்பிராயங்களின் பெருமையால், அப்பத்திரிகையை முன்னோங்கும்படிச் செய்தனர்; ஹிந்துபத்திரிகையின் தற்காலநிலையும்பெருமையுமே அதற்குச் சான்றாகும். இவர் இத்

தென்னிந்தியாவில் தேசபத்திரிகையின் தந்தையாக விளங்கினர்; இவருக்குமுன் இம்மாதிரிப் பத்திரிகைகள் உலாவி வரவில்லை. ஹிந்துவின் பத்திராதிபரானதும், இவரது கவனம் பல விஷயங்களில் நுழைய வாரம்பித்தது. இந்திய மஹா நாட்டிற்கு (Indian National Congress) ஆரம்பமுதல் உழைத்தவருள் இவர் ஒருவர். பம்பாயில் முதல் முதல் 1885-ம்வருஷம் கூடிய இந்திய மஹாநாட்டிற்கு இந்த ராஜாதானியின் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்; அதில் இவரே இந்திய ராஜாங்கத்தின் சீர்திருத்தத்தினிமித்தம் 'ராயல் கமிஷன்' ஒன்று ஏற்படுத்த வேண்டுமெனத் தெரிவித்த முதல் பிரேரேபணையைப் பற்றிய தீர்மானத்தை வெளியிட்டனர். அது காலஞ்சென்ற ஸர். பி. எம். மேடா, காலஞ்சென்ற நரேந்த்ரநாத் சேன் இவர்களால் ஆமோதிக்கப்பட்டது. அன்றுமுதல் ஐயரவர்கள் இந்திய மஹா நாட்டு விஷயத்திலேயே கவனஞ் செலுத்தி, பத்திரிகைகளிலும் ஸதஸ்ஸுகளிலும் மேற்படி விஷயங்களைப்பற்றி வெளியிட்டுக் கொண்டே இருந்தனர். அய்யரவர்கள் நமது நாட்டுத் தொழிலை அபிவிருத்தி செய்யவேண்டுமென்ற அவா நிறைந்து விளங்கினவர். சென்னை மஹாஜன ஸபையை அவர்தான் ஸ்தாபித்தார்; அதன் முதல் காரியதர்சியாகவிருந்து பொது ஜன அபிப்பிராயம் வெளியிடு மார்க்கங்களையுங் காட்டினர். அவர்க்கு இராஜாங்கச் செலவு முதலிய விஷயங்களைப் பற்றி நல்ல ஞான மிருந்ததைக் கவனித்தே அவரை கவர்ன்மெண்டார் இங்கிலாந்தில் நடந்த 'வேல்பி கமிஷன்' முன் சாக்ஷியங் கொடுக்கத் தேர்ந்தெடுத்தனர். அவர் நமது நாடு ஸ்வராஜ்ய மடையவேண்டுமென்றும், அன்ய நாட்டு ஸாமான் முதலியவைகளை விலக்க வேண்டுமென்று மபிப்பிராயப் பட்டவர்; ஸ்வதேசி ஸாமான்களை ஆதரிப்பதில் அவாக் கொண்டவர். அவர் சென்னை ஜாதிய நிதியும், தொழிற் சங்கமு மேற்படுத்தி அதற்காக உழைத்ததும், தீபாவளிப் பண்டிகை காலத்து வீடு வீடாகச்சென்று பணம் வசூல் செய்து நிதி சேர்த்ததும் யாவருமறிவர். மற்றும் ஆசார விஷயங்களிலும் அவர் சில தீர்ந்த கோட்பாடுகள் அடைந்திருந்தனர். பிறர்போல் வீணே பேசாது தனது மனமொப்ப நடப்பவரானபடியால், சென்னை ஆசாரச் சீர்திருத்த சங்கத்தின் அங்கத்தினராய்த், தான் மதவிஷயங்களில் முன்னோர் முறையைத் தழுவாது, விதவா விவாஹம்முதலியது செய்யவேண்டுமென்று



ஜி. சுப்பிரமணிய அய்யர் (1855-1916.)

பேசிய வண்ணமே, தனது வைதவ்யமடைந்த பெரிய பெண்ணுக்கு மறு கல்யாணஞ் செய்வித்துப் பல கஷ்டங்களுக்காளானர். இவ்வகையினராயிருந்ததுடன், சிறியர் பெரியர் என்று பாராட்டாது அவர் பேதாபேதமின்றி எவரிடமும்ஒரேவிதமாய் நடந்து வந்தனர்.

நிற்க, ஹிந்து பத்திராதிபராக இருக்கும்பொழுது அவர்க்குத் தேசபாஷையில் வர்த்தமானப் பத்திரிகைகள் உலாவவேண்டுமெனத் திடமாகத் தோன்றிக்கொண்டி

ருந்ததற்கொப்ப, 'சுதேச மித்திரன்' என்னும் தமிழ்ப் பத்திரிகையை 1882-ம் வருஷத்தில் நடைபெறச் செய்து, அது தமிழுலகில் முதல்நிலை பெறும்படியாகவும், எல்லாரும்அதைமதிக்கும்படியாகவும்,அதன் அபிப்பிராயங்களை நிதானத்துடன் கவனிக்கும்படியாகவும் செய்தனர். 1898-ம் வருஷம் ஹிந்து பத்திரிகையின் பத்திராதிப நிலையையும், அதில் தான் பெற்றிருந்த பாத்யதையையும் விட்டு விலகியதும், அவர் கவன முழுதும் சுதேசமித்திரன் பத்திரிகை அபிவிருத்தியிலேயே செலுத்தினர். இந்த ராஜதானியில் தேசபாஷை வர்த்தமான பத்திரிகைகளுக்கு அவரே தாயாக விளங்கினவர்.

அவருடைய கவனமிவற்றுடன் நிற்கவில்லை. காரியபாக விஷயமான ஞானம் ஜனங்களுக் கேற்படவேண்டு மென்று 1902-ம் வருஷம் 'யூனைடட் இந்தியா அண்ட் நேடிவ் ஸ்டேட்ஸ்' என்னும் ஆங்கில வாரப் பத்திரிகை ஒன்று மிக்க நேர்த்தியுடன் நடத்தினர்.

நிற்க, இராஜத்ரோகப் பேய் குடிகொண்ட 1908-ம் வருஷம் ஐயரவர்களிடம் தவருக அபிப்பிராயங்கொண்ட நமது கவர்ன்மெண்டார் அவர்மீது இராஜத்ரோக கேஸ், சுதேசமித்திரனில் வெளிவந்த சில விஷயங்களுக்காக எடுத்தனர். ஆனல் சில நிபந்தனைகளின்மீது அதைஅமுலுக்குக்கொண்டு வராதிருக்கும்படியாக நேர்ந்தது.

நெடுநாளாக அவருடன் குடிகொண்ட கொடிய வியாதியின் வலிமையால் பொது விஷயங்களில் வரவர அவர் அதிகமாகத் தலையிடமுடியாமற் போயிற்று. ஆயினும், அவர் தமது அபிப்பிராயத்தை அடிக்கடி வெள்ளிடைமலைபோலப் பத்திரிகைகளின் மூலமாக வெளியிட்டுக்கொண்டே யிருந்தனர்.

அவருடைய வியாதி குறையாது நீடித்து வர, யமதருமனே பரமநேசனுகவந்து அவர் ஆவியைக் கவர்ந்து, ஏப்ரல்மீ 18-ம் தேதியன்று வியாதிக் கூட்டிலிருந்து அவரை விடுவித்துவிட்டான்.

அவரது பலவகைப்பட்ட ஞானமும், முடிந்த எண்ணமும், கோட்பாடும் பேதமற்ற நினைவும், யாவரையுமுயர்த்த வேண்டுமென் றுழைப்பதும், மனத்தெண்ணத்துக் கொப்ப நடப்பதும், ஆகிய அரிய குணங்களை உள்ள பெரியவரை இந்த ராஜதானி மாத்திரமன்று, இந்திய நாடே கைசோர விட்டுக் கண்ணீர் சோர, உறுதியுரைக்கும் துணையற்று விளங்குவதின் பரிதாபத்தை நாம் எழுதிமுடியுமா? கவர்ன்மெண்டார், எதுகாரணத்தைப்பற்றி அவரிடம் தவருக எண்ணங்கொண்டனரோ நமக்குத் தெரியாது. ஆனல் ஜனங்களுக்கோ,அவர் பெரிய மஹானுகத்தான் விளங்கினர். அவர் பேரைக்காட்டிலும் பெருமை பெற்றபெயர் இச்சென்னையிற் கிடையாது. பொதுவிஷயத்திற்கு முன்னின்றவர் அவரே; நமது தேசத்துவர்த்தமானப் பத்திரிகைகள் முன்னிலைபெற உழைத்தவரும் அவரே; பேசுந்திறத்திற் சிறந்து அத்திறத்தை உலக நன்மைக்குபயோகித்து விளங்கியவரும் அவரே; அவரே பெரியவர். அவர் நம்மை விட்டுப் பிரிந்தது நெடுநாள்வரை மறையாது: அவரிடம்கொண்ட மதிப்பைக் கொள்ளை கொள்ளத்தக்க மஹான் ஏற்பட நெடுங்காலம்வரை முடியா தென்பதை வெளிப்படுத்துவும் வேண்டுமோ?

"வாயுவினை நோக்கியுள மாண்டவய நாவா
யாயுவினை நோக்கியுள யாக்கையவை யேபோல்
தீயவினை நோக்கும்யல் சிந்தனையு மில்லாத்
தூயவனை நோக்கியுள துப்புரவு மெல்லாம்."

—குண்டலகேசி.

---

**மனதை அடக்கல்.**—யானையைக் கட்டுத்தறியினின்றும் அவிழ்த்துவிட்டால் மரங்களையும் கிளைகளையும் முறித்துவிடும். பாகன் மாவெட்டியால் அதன் மண்டையில் ஒரு குத்துகுத்தினல் அவ்விடத்தன த்தை யொழித்து லாதுவாகும். அதுபோல் மனதை அடக்காமல் விட்டுவிட்டால் அது கெட்ட விஷயங்களில் பிரவர்த்திக்கும். அதை விவேகமென்னும் வாளால் வெட்டித் தடுத்தால் துர் விஷயத்தில் பிரவேசியாது. நம்முடைய தேகத்தில் நமக்குள்ள அபிமானத்தை நாம் எப்படித் தொலைக்கலாம்? தேகமானது எலும்பு, மாமிசம், இரத்தம் முதலியவற்றலாகியிருக்கிறது. இவைகளில் ஒவ்வொன்றையும் தனித்தனியாக எண்ணிப் பார்த்தால்வெகு அசங்கியமாகத் தோன்றும். அன்றியும், ஒவ்வொன்றும் நாள்பட்டிருந்தால் நாற்றமெடுத்து அழுகிப்போய்விடும். இப்படி எண்ணியெண்ணி அதன்மேலுள்ள பிரியத்தை அகற்ற வேண்டும்.

## தற்செயலாய் நேரும் அபாய ஸம்பவங்களும், அவற்றின் ஆரம்ப சிகித்ஸைகளும்

## ACCIDENTS & EMERGENCIES

### Hemorrhage— இரத்தத் தெறிப்பு

முன்கையிலும் அங்கையிலும் நேரும் இரத்தத் தெறிப்பிற்குச் சிகித்ஸை.—தோளிற்குக் கீழாகக் கையில் எந்த இடத்திலிருந்து இரத்தம் வெளிவந்தபோதிலும், மேல் கையைக் கட்டுவதாலேயே அவ்வாறு வெளியாதலைத் தடுத்துவிடலாம். ஆனால் அது முன்கையிலாவது அங்கையிலாவது அவ்வாறு நேர்ந்தால், முழங்கைக்குச் சற்று மேலே இறுகக் கட்டுவதால் இரத்தத்தை வெளிவராது நிறுத்திவிடலாம். இதற்குக் காரணம் வெளிப்படை. மேற்கையில் ஒரே எலும்புதானிருக்கிறது மேற்கையை இறுகக் கட்டுவதால், எல்லா இரத்தக்கால்களும் அவ்வெலும்பைச் சுற்றி அழுத்தப்படுவதால், இரத்தம் இவ்விடத்தின் கீழ் வராதிருக்கும்படியாகத் தடுக்கப்படுகிறது. ஆனால் கயிற்றைமுன்னங்கையில் கட்டினால், இவ்விடத்தில்இரண்டு எலும்புகளிருப்பதால், அவற்றின்நடுவிலிருக்கும் இரத்தக்கால்களை முழுதும்வாய்குவியும்படியாக இறுக்கமுடியாதாகிறது. ஆகையால்முன்கையிலாவதுஅங்கையிலாவது நேரும் இரத்தக்காயங்களிலிருந்து இரத்தம் வெளிவராது தடுப்பதற்கு; முழங்கைக்குமேல், மேல்கையை இறுகக் கயிற்றாலோ வேறெதினாலாவது கட்டுவதே ரத்தம்வெளிவராதிருக்கச்செய்யும். ஆனால் அங்கையில் நேரும் வெட்டுக்களிலிருந்து வரும் இரத்தத்தை நாடிப்பார்க்குமிடத்தில் இரத்தக் கால்வாய்களைக் குறுக்குவதால் தடுக்கலாம்; அல்லது சுமடுகளை நாடியின் இரண்டு பக்கங்களிலும் வைத்து இறுகக்கட்டுவதாலும் பிரயோஜனமுண்டாகலாம்.

தோடையிலேற்படும் இரத்தத் தேரிப்பிற்குச் சிகித்ஸை.—சில ஸமயங்களில் பிரஷ்டபாகத்தின் தசை (சதை) நிறைந்த இடத்திலேற்படும் ஆழ்ந்த காயங்களிலிருந்து இரத்தம் வெளியாகலாம். காயத்தின் வாயின் மேல் அழுத்துவதல்லாமல் இரத்தம் வெளிவராது தடுக்க வேறுவழியில்லை. இவ்விடத்தில் சதைக்குக்கீழ் மிக ஆழ்ந்த இடத்தில் இரத்தக்கால்கள் இருப்பதால், இங்கு இரத்தக்கால்களைக் கைகளால் தடவித் தேடிக் கண்டுபிடித்து அழுத்துவது அசாத்யமான வேலை. தொடையின் பின்பாகத்திற்கும்கீழ்க் காலுக்கும் இரத்தத்தைப் பங்கிட்டுத்தரும் செவ்விரத்தப் பெருங்காலை அமுக்குவதினால் தொடையி லுண்டாகும் இரத்தத்தெறிப்பைத் தடுக்கலாம். அரைப்பூட்டுவளையுமிடத்தில், நாபிக்கு காலங்குலம் கீழாக, வயிற்றிலிருந்து தொடையின் முன்பக்கமாக இந்த இரத்தக்கால்வாய் வெளிவருவதைக் காணலாம். இந்த இடத்தில் அதை, அது அடுத்திருக்கும் எலும்பின்மேல் கட்டைவிரலால் அழுத்திஇரத்தம்வெளிவருதலைத்தடுக்கமுடியும். இரத்தம் வெளிவருவது தொடையின் கீழ்ப்பாகமானால், மேல்கையில் செய்த விதமாகவே, தொடையின் மேல் பாகத்தில், இரத்தக்காலின்மேல் அழுத்தமான சுமடையும் வைத்து, கயிற்றால் இறுகக்கட்டினால் இரத்தத்தை வெளிவராது தடுத்துவிடலாம். இது முன்மேல் கைவிஷயமாகசொன்னவிதமேகட்டைத்தருந்தவிதம்அரைமணிக்கொருமுறை தளர்த்தியும் இறுக்கியும் காலில் துர்மாமிசம் ஏற்படாதபடி செய்யலாம். கட்டைத்தளர்த்தும்பொழுது மாத்திரம் ஜாக்ரதையாக இரத்தம் வெளிவராதபடி முன்சொன்னபடியே கட்டைவிரலால் அழுத்திக் கொண்டபின்புதான் கட்டைத்தளர்த்த வேண்டும்.

காலிலும் பாதத்திலு முண்டாகும் இரத்தத் தெறிப்பிற்குச் சிகித்ஸை.—இவ்விடத்திலிருந்து வெளியாகும் இரத்தத்தை முன்னங்கையிலும் அங்கையிலு முண்டாகும் இரத்தத் தெறிப்பிற்குச் சொன்ன முன் முறைப்படியே நிறுத்தலாம். ஆனால் கீழ்க்காலில் இரண்டு எலும்புக ளிருப்பதாலும், முழங்காலுக்குமேல் ஒரே எலும்பிருப்பதாலும், முட்டுக்குமேல் கட்டியிறுக்குவது மிக்கபயன் தரும்; அவ்வாறு செய்வதால், கட்டை இலேசில் இறுக்கமுடியும்.

அங்க அமைப்பினால் இரத்தத் தெறிப்பைத்

தடுத்தல்.—காயம்பட்ட இடம் ஹ்ருதயமிருக்குமிடத்திற்கு மேல்பக்கமானால், ஹ்ருதயத்தி லிருந்து இரத்தத்தை அங்கு செலுத்துவது மிகவும் கஷ்டமாகவிருக்கும். உதாரணமாக, கையிலாவது காலிலாவது வெட்டு ஏற்பட்டால், அவ்வங்கங்களைச் சரீரத்தைக்காட்டிலும் உயர்ந்த நிலையிலிருத்துவதால் இரத்தத் தெறிப்பைத் தடுக்க வெகு உபயோகமாக இருக்கும்.

கால்களை மடக்குவதால் இரத்தத் தேறிப்பைத் தடுத்தல்.—வேறு வழி ஏற்படாத காலங்களில், கைகால்களை மடக்குவது வெகு நன்மை பயக்கலாம். உதாரணமாக, மேற் கையிலிருந்து இரத்தம் வெளிவருதை, அழுத்தமான சுமட்டையோ, மடிக்கப்பட்ட துணிமடிப்பையோ, அல்லது கம்பையோ கைக்கடியில் வைத்துக் கையை உடல் பக்கமாக அழுத்தினால் (அதாவது அக்கிளில் மேற் சொன்னதை வைத்துக் கையை அதன்மேல் அழுந்தும்படித் தாக்கினால்)—இரத்தம்வெளிவருதலைக்கிட்டத்தட்ட நிறுத்தலாம். இரத்தக் கால்வாய், இவ்வாறு செய்வதால் கம்பிற்கும் கை எலும்பிற்கும் நடுவில் அழுத்தப்படுவதால் இரத்தம் வெளியாவது குறையும்.

முன்னங்கையிலாவது, அங்கையிலாவது இரத்தம் வெளிவந்தால், மேற்சொன்னபடி முழங்கையை மடிப்பதால், தடுக்கலாம்.

தொடையிலேற்படும் இரத்தத்தை மேற்சொன்னவிதம் நிறுத்தமுடியா தானாலும், அவ்வாறுசெய்வதால் இரத்தநஷ்டத்தைக் குறைக்கலாம்.

காலிலாவது பாதத்திலாவது உண்டாகும் இரத்தத்தெறிப்பைக் காலை மடக்குவதால் நிறுத்தலாம். ஆனால் வெகுபலத்துடன், ஜாக்ரதையாக முன்சொன்னபடி அழுத்த வேண்டும். அவ்வாறுசெய்வதால் இடையே வைக்கப்படும் வஸ்துவிற்கும் காலெலும்பிற்கும் நடுவில் இரத்தக்குழாய் அகப்பட்டுக் குவிந்துவிடும்; ஆகையால் இரத்த நஷ்டமேற்படாது.

## பெற்றோர்களும் பிள்ளைகளும்

## PARENTS & CHILDREN

'அரிதரிது மானிடராதலரிது' என்ற ஆன்றோர் வாக்குக்கிணங்க, நாம் பெற்றுள்ள இம்மானுடவுடலோ மிக்க சிறந்தது. நமது சாஸ்திரக் கோட்பாட்டின்படி, இவ்வுயிரானது, தான் முந்தின ஜன்மங்களிற் செய்துள்ள புண்ணிய வசத்தாலேயே இப்பிறப்பைப் பெற்றுளது. இச்சென்மத்தினிலேயே 'இது நல்லது, இது கெட்டது' என்றும், 'இதைச்செய்யலாம், இதைச்செய்யலாகாது' என்றும் இத்தகைய நன்மை தீமைகளை அறவே விளக்கத்தக்க பகுத்தறிவென்னும் இப்பெரும் குணத்தைக் கடவுள் அனுக்கிரஹித்திருக்கிறார். மேலும் நாம் பின்பு உய்வதற்கும் மார்க்கமானதலால், இதனில் நாம் செய்ய வேண்டியவைகளென வரையறுக்கப்பெற்ற பல்வேறு காரியங்களையும், நம் வலிமைக்கும், மனோதைர்யத்திற்கும், உதவியின் பலத்திற்கும் தக்கவண்ணம்அவைகளைக்கூடியவகையில் செவ்வனே செய்து, நம் மனசாட்சிக்கு விரோதமாய் நடவாமல் நம் காலத்தைப் போக்க வேண்டும். இவ்விதம் ஒருவன் தன் காரியங்களைச் செவ்வனே செய்து, தனக்கும் பிறர்க்கும் நல்லவனாக நடந்துவருவதற்கு அவன் சற்சங்கங்களில் பழகுதலே காரணமாகும்.

ஒவ்வொரு மனிதனும் பூமியிற் பிறந்தது முதல், வெகுகாலம் வரையில் பழகி வருவது அவனது குடும்பமேயாகும். அவனுடன் பழகுபவர்களும், அவனது பெற்றோர்களேயாவர். பெற்றோரும் உற்றோருமே அவனது ஆயுளையும் நடத்தையையும் உருவாக்குபவர். ஆதலால் ஒவ்வொருவனும் தான் இப்பூமியில் வாழ்வதற்கே காரணபூதராய்கிற்கும் பெற்றோர்களுடைய பெருமையையும்,

'பெறுமவற்றுள் யாமறிவ தில்லை யறிவறிந்த
மக்கட்பே றல்ல பிற'

என்று மிகத் துணிவுடன் பேசப்பெற்ற இம்மக்களுடைய பெருமையையும், இவர்கள் ஒவ்வொருவருடைய பிரத்யேகமான கடமைகளையும் ஏட்டில் எழுதியுரைப்பது சாத்தியமாகுமா?

மனிதன் இப்பூமியில் உற்பத்தியாகும் காரணங்கள் பலவற்றுள், அவன் பிரஜாவிருத்தியைச் செய்யவேண்டுமென்பது மிக்க அவசியமானதென நமது பண்டை நாற்கள் கூறுகின்றன.

ஆனதுபற்றியே விவாகம் முதலிய லௌகிக காரியங்களை வைதிக கர்மங்களுள் நம்மவர் சேர்த்துளர். மேலும் புத்ர உற்பத்தியில்லாத ஒருவன் தன் குடும்பம் சந்ததியின்றி நாசமுறுவது மாத்திரமேயன்றி, அவனும் 'புத்' என்றதோர் நரகினுள் விழ்ந்து உழல்கின்றனனென்றும் அவனது இறந்துபட்ட மூதாதைகளும் தம் வம்சம் நாசமடைந்ததை யுன்னிக் கன்னுகின்றனரென்றும் கூறுகின்றனர். ஆதலால் புத்திரப்பேறு மனிதனுக்கு மிகச்சிலாக்கியமானது. ஆனதுபற்றியே திருவள்ளுவரும் 'பெறுமவற்றுள் யாமறிவதில்லை மக்கட்பேறல்ல பிற' என்று கூறியுள்ளார். அதுவே, என்றும் குறைவுபெறாத பெருகும் செல்வம். குடும்பத்திற்கும் இராஜாங்கத்திற்கும் அதுவே உண்மையான ஆஸ்தியாகும். ஆதலால் இவ்வளவு மகிமைக்கும் காரணமான பெற்றோர்களின் கடமைகள் யாவையெனச் சற்றுராய்வோம்.

'பெற்றோர்கள் எவ்வழியோ அவ்வழியே மக்களும்' ஆதலால் தன் மகன் அன்பும் அடக்கமும் பொருந்தி, தயை தாட்சணியம் முதலியநற்குணங்கள் செறிந்து, செய்ந்நன்றி மறத்தல், உயிர்க்கொலை செய்தல், கள்ளுண்டல், பொய்மொழிதல், களவாடல் முதலிய பஞ்சமா பாதங்களை அறவே நீக்கி, யாவராலும் தன் மகன் புண்யபுருஷனெனப் புகழுடன் பேசப்படும் யோக்கியதையைப் பெற விரும்பும் பெற்றோன், தானும் மேற்கூறிய நற்குணங்கள் வாய்ந்தவனும், தீக்குணங்களை மாய்த்தவனுமிருத்தல்வேண்டும். 'விரையொன்றுபோடச் சுரையொன்று விளையுமா?' மஹாலோபியான ஒரு தகப்பனுக்கு மிகத் தர்மவானான மைந்தனுதிப்பனா? ஆதலாலேயே மேலோர் தம்மிடம் புதிதாய் வரும் வாலிபர்களை விளித்து 'உன் வம்சம் என்ன? கோத்திரம் யாது? உன் பெற்றோர் யாவர்? அவர்களது நிலைமையென்ன?' என்று அவனது பிறப்பு வளர்ப்பைப்பற்றிக் கேட்டு, மனத்திருப்தி பெற்றபின்பே அவர்களிடம் நம்பிக்கை வைப்பர். ஆதலால் பிள்ளைகளைப் பெற்றவர், தாம் எக்காரணம் பற்றியும் தீய ஒழுக்கங்களிற் பிரவேசியாமல், தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும். மேலும் தம் குழந்தைகளுடன் பழகும் ஒவ்வொருவரும், தப்புமார்க்கங்களில் பிரவேசியாதவர்களாயும், மனோவாக்குக் காயங்களில் பரிசுத்தமுள்ளவர்களாயுமிருக்கிறார்களாவெனப் பார்த்துக்கொள்ள வேண்டியதவசியம். ஏனெனில் குழந்தையின் மனமானது ஸ்படிகம்போல் பரிசுத்தமானது. இதுபற்றியே கிருஸ்தவமதாசாரியரும் "மனத்தூய்மை பொருந்தியதால் குழவிகளே ஆசீர்வதிக்கப் பெற்றவர்" (Blessed are the children for they are pure in heart) என்றும் "தூய்மையும் அறியாமையும் பொருந்தியதால் அக்குழந்தைகளை என்னருகில் கொணருங்கள்" (Bring in ye those children for they are pure and innocent) என்றும் குழந்தைகளின் தூய்மை பொருந்திய மனத்தைப்பற்றிப் புகழ்ந்திருக்கின்றனர். அவர்களுடைய மனமானது ஓர் புகைப்படம் போன்றது. புகைப்படமானது தன் முன்னுள்ள எந்த வஸ்துவையும் அதனுடைய உண்மையான நிலையில் தன்னுள் பிடித்துவிடுகிறது அவ்வஸ்து நேராக நிற்கின்றதா, அழகாயிருக்கின்றதா அல்லது அது நிற்கும் அந்நிலைமையில் நாம் பிடித்தல் தகுமா என்று அது சிறிதும் யோசிப்பதில்லை. ஆதலால் தன்னுடைய கருவியில் நல்ல ஒழுங்கான படம்பிடிக்க விரும்பும் படம் பிடிப்போன், தன்னுடைய இயந்திரத்தைமிக்கஉசிதமான இடத்தில் வைத்தோ, அல்லது தான் படம்பிடிக்க விரும்பும் வஸ்துவை ஓர் ஒழுங்கான இடத்தில் வைத்தோ சீர்ப்படுத்தல் வேண்டும். ஆங்கும் முன் நிற்கும் உருவம் எந்நிலையில் இருக்கிறதோ அந்நிலையிலேயே படமும் பிடிக்கப்படும். ஆதலால் புகைப்படமானது தன்னிஷ்டம்போல நன்மைகளைக் கொள்ளவும் தீமைகளைத் தள்ளவும் சக்தியற்றதாயிருக்கின்றது. அதுபோலவே, குழந்தையின் மனமும் தான் காணும் பிறமனிதர்களின் குணங்களையே சிறிதும் மாறுதலின்றிக் கொள்ளும்.

இது இங்ஙனம் நிற்க, நம் பழந்தமிழ் நாட்டார், தம் மக்களை ஏதோ விளையாட்டுக் கருவிகளாக மதித்து வருகின்றனரேயன்றி அக்குழவிகளின் பெருமையையாவது அல்லது அவர்கள் பின் எவ்விதம் ஆவார்கள் என்ற அறிவையாவது சிறிதேனும் பெருமல், அவர்களுக்கு நல்லொழுக்கத்தையும், நற்குணங்களின் தேர்ச்சியையும் கல்வியினூக்கத்தையும் புகட்டாது அசட்டை செய்கின்றனர். இதுவும் நீதியோ! இப்பொழுது வயதில் முதிர்ந்த பெரியோர்கள் கிழவர்களாகிக் காலம் சென்றபின் இவ்வுலகத்தில் பெரியவர்களாகத் தம்மக்களேயாவர் என்பதை அவர்கள் அறிந்தும் அறியாதார்போல் நடிப்பதின் தாத்பரியம் யாதோ? அறிவில் முதிர்ந்த பெரியோர்கள் கூட 'என் பிள்ளை ஒன்றுக்குமுதவான். அவனை நல்வழிப்படுத்தல் மிக்க வசாத்தியமான காரியம், அவனுக்குக் கல்வியாவது வரவாவது' என்று கூறி அவர்களைக் கவனியாமல் விட்டுவிடுகின்றனர். இது என்ன பரிதாபம்! அம் மைந்தன் பிறக்கும்போது மூடனுகவும் அயோக்கியனுகவுமா பிறந்தான்? அவன் இந்நிலைமைக்குவர அவன் பெற்றோர்களே யன்றோ காரணமானவர்? பால்யமுதல் அவன் நல்வழிப்பட்டு வருவனேல், அவன் முறை திருப்ப வசதியுண்டாமா? அல்லது முறை திரும்பிய ஓர் இளைஞனைச் சீர்திருத்தல் என்ன இயலாத காரியமா? கருமானொருவன் தன் முன்னுள்ள கும்பிடு சட்டியிலுள்ள சிறிது நெருப்புப் பொரியைக் கொண்டு மிகச் சிரமப்பட்டு ஊதிப் பெருநெருப்பாக்கி வெள்ளியையும், சுவர்ணத்தையும் உருக்கிவிடுகின்ருன். அதுபோல, குணம் மாறிப்போன பிள்ளையினிடமுள்ள சிறிது நற்குணத்தைக் கொண்டு அவர்களுடைய தீக்குணங்களைப் போக்க வழிதேடுவது ஓர் அரிய காரியமன்று. மேலும் கந்துக மதக்கரியை அடக்கலும், கரடி வெம்புலி வாயைக்கட்டலும், ஒரு சிங்க முதுகின்மேற் கொள்ளலும், கட்செவி எடுத்தாட்டலும், மலைகளைக் குடைதலும், ஆறுகளையடக்கலும் இவைபோன்ற அசாத்தியமான காரியங்களே சாத்தியமாவதைக் கண்டும் கேட்டுமுள்ள நமக்கு ஒன்று மறியாச் சிறுவர் எம்மாத்திரம்? அவர்கள் எவ்வளவு துஷ்டராயினுமென்ன? "அன்பின் வழியது உயிர்நிலை" என்றவாறு உயிர்நிலைக்கே ஏதுவான இவ்வன்பு என்னும் மருந்தை ஏற்றவாறு உபயோகித்தால் எவ்விதக் கடுமை பொருந்தியதுவும் எளியதாகும். 'கடிவது மற' என்ற ஆன்ருேர் வாக்குக்கிணங்க பிள்ளைகள் குற்றஞ் செய்வாராகில் அவர்களை எப்பொழுதும் கண்டியாமல் 'நயம்படவுரை' என்ற வாக்குப்படி நயமாகவே சொல்லித்திருத்தல் சாலச் சிறப்புடைத்து.

ஆயினும் கடுமை யென்பதே சிறிதும் கூடாதென்பதன்று. சதுர்வித உபாயங்களில் பின்னதாகக் கூறப்பட்ட தண்டம் மிக்க அவசியமானதே. ஆயினும், அதை மற்ற வுபாயங்களெல்லாம் ஆகி, அதுவே யெஞ்சிநின்ருல் அவ்வண்ணம் செய்யவேண்டியதே சரியாகும். ஆனல் அப்படித் தண்டிக்கும் காலத்தில் அத்தண்டனையின் முழுப் பிரயோசனத்தையும் பெறுமாறு செய்தலே தகுதி. பிதா அடித்தலும், மாதா அவர் முன்னிலையிலேயே ஆற்றுதலுங் கூடாது. எவ்விதத்திலும் நமக்கு அவர்கள் சீர்பெறுவதே நோக்கமாதலால், நமக்கு மிக்க எளிதான சாதனத்தை யுபயோகித்து நம் காரியத்தைப் பூர்த்தி செய்யவேண்டும்.

மேலும், 'தந்தைமகற்காற்று நன்றி யவயத்து முந்தியிருப்பச் செயல்' என்றபடி தந்தை தன் தனயனுக்குச் செய்யத்தக்க உதவிகளுள் மிகச் சிறந்தது அவனை எச்சபையிலும் முந்தியிருக்கும் வண்ணம் செய்யவேண்டுவதே. திருவள்ளுவர் பெருமான், தமது சாமர்த்தியத்திற்கேற்ப அரிய பெரிய விஷயங்களை நுண்ணிய இரு வரிகளில் அடக்கிவிட்டனர். ஒருவனைச் சபைக்கு முந்தியிருக்கச் செய்தல் இலகுவானதன்று.

> 'கற்ருருட் கற்ரு ரெனப்படுவர் கற்ருர்முற்
> கற்ற செலச்சொல்லு வார்'

என்பது போன்று ஒருசபாநாயகன் மிக்கக் கல்விகளில் மிகத்தேர்ந்தவனு யிருக்கவேண்டும். மேலும் பலரும் மெச்சத்தக்க நடத்தையுடையவனுயும் அவன் இருத்தல் வேண்டும். ஏனெனில், உபதேசத்திலும் அனுஷ்டித்

டித்துக் காட்டலே மேலானது. இக்காரணம்பற்றியே உலகினர் எவ்வண்ணம் நடக்கவேண்டுமென்ற விஷயத்தைச் சாஸ்திரங்களில் எடுத்துக் காட்டியிருப்பதுபோதாதெனக் கருதி, ஈசனே மானிடவடிவமெடுத்து நடித்துக்காட்டியிருக்கின்றனர். ஆதலால் பிறருக்குபதேசம் செய்யும் உபந்நியாஸி, தானே, 'காதல், கவருடல், கள்ளுண்டல், பொய்மொழிதல், ஈதல் மறுத்தல்', ஔவியம் பேசல் போன்ற தீக்குணங்கள்பொருந்தினவனாயிருந்து, பிரஸங்க மேடையில்மட்டும் நல்லொழுக்கப் பயிற்சியைப்பற்றிப் போதிப்பானேல் அவனது வார்த்தைகளுக்கு மதிப்புண்டா? பழிப்பேயுண்டு. ஏனெனில் செல்வம் குறையின் நஷ்டம் ஒன்றுமில்லை. தேக சௌக்கியம் குறையின் சிறிது நஷ்டமுண்டு. ஆனால், குணங்கெடில் எல்லாம் நஷ்டமாகும். ஆதலால், ஒவ்வொரு உபந்நியாஸியும் நற்குணம் பொருந்தியவனாயிருத்தல்வேண்டும்.

'அவயத்து முந்தியிருப்பச் செயல்' என்னும் மகிமைபூண்ட ஒவ்வொரு பெற்றோனும் தனது மகவை 'சிம்பிலே வளையாதது தடித்தால் வளையுமா' என்றபடி சிறு குழந்தையாயிருக்கும்பொழுது முதற்கொண்டே சீர்படுத்தி வரவேண்டும். ஏனெனில் தொட்டிற் பழக்கம் சுடுகாடு மட்டில் நிற்கும். மைந்தர்கள், சீர்குலைவதற்கு வாலிபப் பருவமே சான்ற காலமாகும். அப்பொழுதே அறியாமையும் முறட்டுத் தைரியமும் துஷ்டர்களின் சகவாஸமும் இன்னகாரியத்தைச் செய்தால் இன்னகாரியம் விளையும் என்ற முன்யோசனையின்மையும் உண்டாகும் காலமாகையால், அக்காலத்தில் அவர்களுடைய நடத்தை, ஸம்பாஷணை, பழக்கம் முதலிய ஒவ்வொன்றையும்பற்றிக் கவலைகொள்ளலோடும் அவர்களுடைய பழக்கவழக்கங்களெல்லாம் எவ்விதம் இருக்கின்றனவென்று அறிந்துகொள்ள வேண்டும். பிள்ளைகளை எல்லோரும்பெற்றுவிடுகின்றனர். பெற்றால் மட்டும் போதுமா! அவர்களை ஒரு குறைவுமின்றி வளர்த்து நல்வழிப்படுத்திப் பிள்ளையைச் சான்றோரெனக் கூறும்படி செய்வித்தலன்றோ துன்பம்! ஆனதுபற்றியே, குழவிகளை வளர்த்தலைப்பற்றிப் பெரியோரும்,

“மதலையைப் பெறுநாள் துன்பம்,
வளர்த்திடு நாளும் துன்பம்,
விதலைநோய் அடையில் துன்பம்,
வியன்பருவத்தும் துன்பம்,
கதம் உறு காலர் வந்து,
கைப்பற்றில் கணக்கில் துன்பம்;
இதம் உறல் எந்நாள் சேயால்
என்றைக்குந் துன்ப மானால்.”

என்று கூறியுள்ளார்.

அவையத்து முந்தியிருப்பச் செயலுக்குக் கல்வி அவசியசாதனம். இம்மை மறுமைப் பயன்களைக் கொடுக்கவல்லதும், எடுக்கஎடுக்கக் குறையாததும், உடையோனுக் குறுங்கேட்டை விலக்கவல்லதும், தன்னை விளக்கத்தக்கதும், எவ்வித மபக்கத்தையு மறுப்பதற்குக் காரணமானதும் ஆகிய மிக்க யோக்கியதையை ஒவ்வொரு பெற்றோனும் தன் மகனுக்குக் காலத்தில் கொடுத்தல்வேண்டும். 'தாயோடு அறுசுவைபோம் தந்தையோடு கல்விபோம்', என்றபடி தந்தையே கல்விக்கு நாயகனாவான்; தநயனுக்கு எவ்வித செல்வம் வைப்பினும் அது ஒருகாலத்தில் அழிந்துபோம். ஆனால் இச்செல்வமோ,

வெள்ளத்தாலொழியாது வெந்தணலால்வேகாது
வேந்தராலும், கொள்ளத்தான் முடியாது
கொடுத்தாலும் நிறைவொழியக்குறைபடாது,
கள்ளற்கோ பயமில்லை காவலுக்கோ மிகவெளிது.

இத்தகைய பெருமைவாய்ந்த கல்வியின் பிரயோஜனத்தைப் பிள்ளைகளுக்குக் கொடாமல் அவர்களைப் பிறவிக்குருடர்களாகவும், ஊமைகளாகவும் ஆக்குதல் மிக்கப் பரிதாபம்!

ஆதலால், ஒவ்வொரு மாதாவும் பிதாவும் தங்கள் மக்கள் நல்லறிவும் நல்லொழுக்கமும் பெற்று உலகில் நற்பெயரெடுத்து ஓங்கிப் புகழ்பெறவும், தீர்க்காயுசும் திடகாத்திரமும் பெற்றுத் தன் குடும்பத்திற்கும் தாய் பூமிக்குமே ஒரு திலகம்போல் விளங்கவும், இவனைக் கண்டோர் பலரும் இவனைப்பெற இவன் தந்தை என்னோற்றான் கொல் எனப் பேசப்படவும் தக்கயோக்கியதையைப் பால்யம் முதற்கொண்டு உபதேசங்களினாலும் அனுஷ்டானத்தினாலும் முற்றுப் பெறச் செய்வித்து நற்பெயரை அடைவார்களாக.

## சாஸ்திரமாணாக்கனது உறுதிமொழி

## MESSAGE FROM A STUDENT OF SCIENCE

(332-ம் பக்கத் தொடர்ச்சி)

இக்காலத்திலும் பண்டைநாள் முதல், இத் தெய்வீக நகரம் கணித ககோள சாஸ்திரங்களின் இருப்பிடமாக விளங்குகிறது. இந்திய நாட்டு டைகோ ப்ராஹ் என்று புகழ்பெறத்தக்கவராகிய ராஜா ஜய ஸிங் அவர்களால் ஸ்தாபிக்கப்பட்ட மனமந்திர மென்னும் சோதிமண்டபம், இன்றும் வெளிநாட்டிலிருந்து வருபவர்க்கு ஆச்சரியத்தை யுண்டாக்கித் தன்னைக் கொண்டாடும்படிச் செய்கிறது. அவருடைய தூண்டுகோலினாற்றான், யவனசிகாமணியாகிய யூக்லிட் இயற்றிய க்ஷேத்ர கணிதத்தையும், நேபியர் இயற்றிய பரிகன்மங்க (Logarithms)ளையும் பண்டித ஜகந்நாதர் ஸம்ஸ்க்ருதத்தில் பாஷாந்திரப்படுத்தினார். பண்டிதர்களாகிய பாபுதேவ சாஸ்திரியாரும் ஸுதாகர த்விவேதியரும் நமது காலத்தில் ராஜா ஜய ஸிம்ஹரது ஸம்பிரதாயத்தைக் கைப்பற்றி நிலைக்கச்செய்துகொண்டிருக்கிறார்களென நாம் கூறவேண்டிய தநாவச்யம்.

இந்த ஹிந்து ஸர்வ கலாசாலையின் ஏற்பாட்டைப்பற்றி ஆரம்பத்தில் பேசத் தொடங்கிய காலத்தில் நான் அச்சத்திற்கு ஸமானமான கவலை கொண்டேன். தற்காலத்தில் உத்பவிக்கும் புதிய இந்திய நாட்டில் ஸமயவாதத்திற்குட்பட்ட படிப்பிற்கு இடங்கிடையாதென்று எனக்கு எப்பொழுதும் தோன்றியது. ஹிந்து ஸர்வ கலாசாலைக்குயிர் கொடுத்த பேர்கள், மேற்சொன்ன பாறையில் மோதாது தமது கப்பலை வெளியேற விட்டதற்கவர் கொண்டாடத்தக்கவராவர். மேலும், தமது கலாசாலை எவ்வகுப்பினர்க்கும், ஜாதிபேதமில்லாமல், இடந்தருமென்று அவர், தவறாக அபிப்பிராயப்படக்கூடாத விதமாகப் பகிரங்கப் படுத்தியிருக்கின்றனர்.

சாங்கியத்திலும் கீதையிலும் கரைகண்டவாதே, யவன தத்வதர்சிகளாகிய ஸாக்ரடீஸ், பிளேடோ இவர்களுடைய தத்வத்தையு முற்றுணர்ந்து, கி. பி. 11-ம் நூற்றாண்டில் வாழ்ந்த முஸ்ஸல்மன் வகுப்பைச்சார்ந்த ப்ரௌடசிகாமணியாகிய ஆல்பெருனி என்பவர், ஹிந்துக்களுடைய தன் மதிப்பையும், அந்யமான எவற்றிடையுமுள்ள மதிப்புக் குறையையும் பற்றிப் பேசும்பொழுது "யவனர் மிலேச்சரே: ஆனால் அவர்க்கே வானசாஸ்திரம் சொந்தம்—அவடார்ந்தான்* நாமதைக் கற்கவேண்டும்; அவரை நமது ரிஷிகளெனவே கொண்டாடவேண்டும்* " என்று பொருள் கொண்ட வராஹமிஹிரரது பிரௌடவாக்கை எடுத்தாண்டிருக்கின்றனர். கி. பி. ஆறுவது நூற்றாண்டிலிருந்த அந்த இந்திய வானசாஸ்திரியின் மொழிகளில் ஸமதிருஷ்டி குடிகொண்டு விளங்கியது.

நாளடைவில் சரித்ரத்தில் நடந்ததே மீண்டும் நடக்கும். பன்னீராயிரம் நூற்றாண்டுகளுக்கப்பால், நமது வானசாஸ்திர சிகாமணியாக விளங்கிய சேவைஜயஸிம்ஹ அரசர், தாம் ஏழுவருஷங்களாகப் பரீக்ஷித்து ஸ்புடமிட்ட கணக்கை ஒப்பிட்டு உண்மை உணர, ஐரோப்பியச் சமர்த்தனது உதவிக்காக போர்த்துகேசிய அரசராகிய எமேனுவெல் ராஜரது சபைக்குப் பிரதிகாரியக்காரர்களை அனுப்பினார். பூர்வத்திலும், இப்போதைய காலத்திற்போலவே சாஸ்திர பரிசீலனைத்துக் குடபட்ட ஹிந்துக்கள் தமது அனுபவங்களையும் கணக்குகளையும், தமது காலத்து ஐரோப்பியப் படிப்பாளிகள் தமக்கு ஊட்டக்கூடிய விஷயங்களையுமுட்கொண்டு, ஒப்பிட்டுச் சீர்ப்படுத்த கவலைகொண்டவர்களே என்பது இதனால் நன்கு வெளிப்படும்.

(எகிப்து தேசத்திலிருக்கும்) முன் அலக்ஸாண்டிரியா நகரத்தில் கிழக்குத்தேசத்தியபாவங்களும், மேனாட்டு பாவங்களும், அடிக்கடி மாதிக்கொண்டிருந்தனவென்பது இப்பொழுது உலகப்பிரஸித்தம். அவ்விடம் பிளேடோமதத்தைச் சேர்ந்த புதிய கட்சியார் வேதாந்த சாஸ்திரத்தின் நுட்பங்களைக் கற்றுக் கொள்ளத் தாமதங்கொள்ளவில்லை. இவ்வகையான் ஞான ஸந்திப்பு பாக்டாட் நகரத்து அரசாண்டுவந்த காலிப்களின் காலங்களிலும் வளர்க்கப்பட்டு வந்தது. "சாஸ்திரவிஷயத்திற்கூட ஐரோப்பா இந்தியாவிடம் பெருங்கடன்கொண்டிருக்கிறது. ஏழாவது எட்டாவது நூற்றாண்டுகளில் ஆரபியர்க்குக் கணக்கு, பீஜகணிதம் இவற்றின் ஆசிரியர்களாக இந்தியர்விளங்கினர்; ஆரபியர் மூலமாகவே மேனாட்டார் எவருமவற்றைக் கற்றது. நாம் முற்சொன்ன சாஸ்திரங்களை ஆரபியப் பெயரால் கொண்டாடியபோதிலும், அக்கொடைக்கு நாம்இந்தியாவிற்கேகடன்பட்டிருக்கிறோம்" என மேக்டோனல்ட் என்பவர் பொருத்தமாகக் கூறியிருக்கிறார். ரஸாயனத்திலும், நம்மிடம் ஆரபியரும், அவர் மூலமாக ஐரோப்பியரும், பட்டகடனைப் பற்றி எனது ஹிந்து ரஸாயன சரித்ரத்தில் "முஸல்மான் மாணவர்கள், ஞானதாகத்தால் நமது கலாசங்க பீடங்களுக்குக், (இக்காசியு மதலடங்கியது தான்) கூட்டங்கூட்டமாகக் குவிந்து, ஞான ஊற்றிடமாகிய அவ்விடங்களில்தமது மனவமைதிகொள்ள

*இதனோடு கீழ்வரும் நாலடியார்ச் செய்யுளை ஒப்பிடுக:—

தோணி யியக்குவான் தொல்லை வருணத்துக்
காணிற் கடைப்பட்டான் என்றிகழார்—காணாய்
அவன் துணையா ஆறுபோ யற்றே நூல்கற்ற
மகன் துணையா நல்ல கொளல்.

ஞானபானஞ் செய்திருக்கின்றனர். அக்காலத்து இந்தியாவுக்குச் சென்று நேர்பட ஞானஸ்தானங்களில் கற்பதே, ஒருவன் படிப்பை முடித்ததற்கு லக்ஷணமாகக் கொண்டாடப்படுவது வழக்கமாக இருந்தது" என்று கூறியிருக்கிறேன்.

இப்பொழுது நமக்கு அக்கடனைத் திருப்பி, ஒரு வேளை வட்டிக்குவட்டியுடன் கூட்டியோ என்னவோ, கொடுக்கவேண்டியது ஐரோப்பாவின் கடனாகும். அஸாத்யமாகத் தோன்றினும், நம்நாட்டுக் கல்வியின் நிலை கீழ்ப்பட நேர்ந்தகாலமும், ஐரோப்பாவில்கல்விக் கிளர்ச்சியுண்டாகிய காலமும் ஒரேஸமயத்தவாகி இருக்கின்றன. நான் முன்னரே ஜயஸிம்ஹரை இந்திய **டைகோப்ராஹ்** என்றுகூறினேன்; அவருடைய பிரயாசையாவது அவருக்குப் பின் வந்தவர்களின் பிரயாசையாவது, மேனாட்டுக் **கெப்லர்**போன்றவர் ஒருவரையாவது உண்டாக்கமுடியாது போயிற்று. கெப்லர்போன்றவர் ஏற்பட முடியாமையாலே பூமியின் ஆகர்ஷண சக்தியின் நெறிகளைக் கண்டுபிடிக்கக்கூடிய **நியூடன்** *போன்ற பெரிய சாஸ்த்ர விசாரமுடையவர், உண்டாவதற்கு இடமில்லாது போயிற்று. அந்தப் பெருமை ஐரோப்பாவிற் கென்றே தனித்து வைக்கப்பட்டது போலும்! **பேபர்** கூறியவாறு கி. பி. பன்னிரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்திருக்கக்கூடிய **பாஸ்கரரே** கணித ககோளசாஸ்திர வானத்துலாவிய கடைசி ஜோதிபோலும். அவர்க்குப் பிறகு இந்திய வானசாஸ்த்ரம் மேனிலையில் ஓங்காது, தான் முதற்கிளம்பிய இடமாகிய ஜ்யோதிஷத்திலேயே முற்றும் மயங்க வாரம்பித்துவிட்டது. தேசபக்தி என்னும் வாஞ்சையாலுண்டாகு மயக்கமே சிலவேளை ஜனங்களை ஸரியான வழியைத் தாண்டி இருள் மூடிய வழிகளிலும், தவறான பாதைகளிலும் புகும்படிச் செய்துவிடுகிறது, நாம் ஜாக்ரதையுடனிருக்க வேண்டும். ஆசியா கண்ட முழுதும் இப்பொழுது புதிய அபீஷ்டங்களிடம் லக்ஷியமே உத்ஸாகத்துடனும் எழுச்சியுடனும் அவாவுடனும் விளங்குகிறது. பழைய பெருமையைப் பாடிக்கொண்டு நாம் கிணற்றுத் தவளைகளாக விளங்குவது நமக்கடாது. **வராஹமிஹ்ரரது** ப்ரௌட வாக்கைக் கைப்பிடித்து, அவரது ஸமதிருஷ்டியையும் விசாலமனத்தையும் அடைந்து, மேனாட்டுக் கற்றுணர்ந்தாரிடம் கற்றுத்தான் ஆக வேண்டும்.

இக்காசிக்கு வரும் ஒவ்வொரு ஹிந்துபக்தனும் ஞானவாபியின் (அதாவது ஞானத்தைத் தருங்கிணற்றின்) நீரைப்பருகாது போகான். இக்காசியிலிப்பொழுதேற்பட்ட, இந்த விச்வவித்யாலயம் உண்மையான ஞானவாபியாக இந்தியநாட்டுவெவ்வேறிடத்திருந்து கற்றிடவென்று குழீஇ வரும் மாணாக்கர் யாவருக்கும் விளங்குமென நான் நம்புகிறேன். சாஸ்திரத்தின் வெவ்வேறு பாகங்களைக் கற்பிப்பதற்கும், அசல் ஆராய்ச்சி விருத்தியின் விருத்திக்கும் தக்கவிதம் அளவற்ற நியமனங்க ளேற்பட்டுள்ளன வென்பது எனக்கு உண்மையான இன்பத்தைத் தர ஆதாரமாகின்றது. இக் கலா ஸங்கமானது இந்நாட்டில் புதிய சுகத்தை ஏற்படுத்திக் கீழ்நாட்டு மேனாட்டு லக்ஷியங்கள குலாவி தெய்விகம் பெற்று, இனிவரும் இந்திய நாட்டின் அபிவிருத்திக்கும் மேன்மையாக இனிக்க விளங்குமென நம்புகிறேன்.

இதுதான் வணக்கத்துடன் நான்கூறும் சுருக்கமான சங்கதி.

* நியூடன். - இவர் ஆங்கிலதேசத்து வானசாஸ்திரிகளுள் முதலில் நிற்பவர். பூமியின் ஆகர்ஷண சக்தியின் முறையைக் கண்டுபிடித்தவர். அவர் அவ்வாறு செயவதற்கு கெப்லர் பார்த்துவைத்திருந்த கணக்குகளே ஆதாரமாயிருந்தன.

# ராமபட்டன்

(ஒரு சிறிய கதை)

## RAMA BHATTAN (A SHORT STORY)

சிறுமானூர் ஜமீனுக்குப் புதிதாய் வந்திருக்கும் அதிகாரி, ராவ் பஹதூர் மாசிலாமணி முதலியார், நிரம்பக் கியாதி பெற்றவர். அவர் பெயருக்கு முன் நிற்கும் பட்டமே அதை நன்கு விளக்கும். டிவிஷன் டிப்டி கலெக்டரா யிருந்தபொழுது ரீ செட்டில்மெண்டில் சர்க்கார் வருமானத்தை ஒன்றரைப்பங்கு ஜாஸ்தி செய்வதற்கு வேண்டிய உதவி புரிந்தார். அடுத்த புதுவருஷ ஆரம்பத்தில், ராவ் பஹதூர் என்னும் பட்டம் கிடைத்தது. டிபார்ட்மெண்டில் விசேஷக் கியாதிபெற்று டில்லி தர்பாருக்குப் பிரதிநிதியாயனுப்பப்பட்டாரென்றால் இவர் யோக்கியதையைப்பற்றி நாம் ஜாஸ்தி சொல்லவும் வேண்டுமோ? தற்காலம் பென்ஷன் பெற்றவுடன், ஜமீன் அதிகாரியாகத் தெரிந்தெடுக்கப்பட்டார்.

இவ்வூருக்கு விஜயம் செய்த மூன்றாவது நாள் ராத்திரி, அவருடைய 3 வயதுள்ள அருமைப் புதல்விக்கு ஜுரம் கண்டது. அதிகாலையிலெழுந்து தன் சேவகர்களிலொருவனான காஸிம் என்பவனைக் கூப்பிட்டு 'இவ்வூர் பிரஸித்திபெற்ற டாக்டரை அழைத்து வா' என்று சொல்லி மீசையில் கைபோட்டு நுனிகளை முறுக்கினார். 'வயித்தியரேங்களா எஜமான்' என்று அவன் கேட்டதும், 'ஆமடா—க்ஷவரம்செய்து கொண்டு ஒரு வாரமாகிறது. நல்ல அம்பட்டனொருவனையும் உடனே அழைத்து வரவேணும். யாரடா அங்கே முருகா. கெட்டிக்காரனையும் நல்ல கிளீனாய் இருப்பவனைக்கூப்பிடு. ஜல்தி' என்று ஆக்ஞாபித்தார். ஜமீனில் கீழ்ச் சிப்பந்திகளுக்குக் குறைவில்லை. இங்கரார்களுடைய கிருதாமீசையையும் தாடியையும், குடியால்

சிவந்து உருண்டு விழிக்கும் கண்களையும்பார்த்தால் எமபடாளுக்கே யொப்பிடலாம். முதலியாரும் மீசைக்குப் பெயர்பெற்றவராகையால் அவர்களுக்கு ஏற்ற அதிகாரியே அவர். அதிகாரியும் படர்களும் நின்றால் 'மீசையும் கிருதாவும், உன்னைப் பார் என்னைப் பார்' என்று வீரியம் பேசுவதுபோ லிருக்கும். இக்காரணத்தாலேயே இவருக்கு இவ்வூரில் வேலை கிடைத்ததென்று சாமானியர்களுள் பிரஸ்தாபம்.

காஸிம், முருகன் ஆகிய இரண்டு படர்களும் வெளியேவந்தவுடன் அவர்களுக்குள் ஓர் ஆலோசனை பிறந்தது. புதிய யஜமான் வந்தபிறகு வீட்டிற்குப் போக சாவகாச மேற்படுகிறதில்லை. வீட்டிற்குப் பக்கத்தில் ஜாதிப் பிள்ளைகள் வசிக்குமிடத்தில் அம்பட்டன் வீடிருப்பதாலும் முருகன் குடியிருக்கும் குடியானத் தெருவில் அவ்வூரில் பிரசித்திபெற்ற ஆயுர்வேத வைத்தியன் ராமபட்டன் வாசம் செய்வதாலும், இருவர்களு மெஜமானுடைய ஏவல்களைச் செய்வதுடன் தங்கள் வீட்டுக்கும் போய்வரலாமென்றெண்ணங்கொண்டு காஸிம் அம்பட்டனை அழைக்கவும், முருகன் வைத்தியனைக் கூப்பிடவுமாகப் பிரிந்தார்கள்.

ராமபட்டனென்பவன் ஜாதியிற் கூத்தாடி, அவன் தாய் ஒரு பிரசித்திபெற்ற தாசியா யிருந்தாள். அவளை ஓரருமை ஆயுள்வேத வைத்தியன் வைப்பாக வைத்திருந்தான். அக்காலத்தில் பிறந்த அந்த ராமபட்டனுக்கு, அவ்வைத்தியன் தானறிந்த பூராவித்தையையும் சிறந்த மூலிகைகளின் குணங்களையும் வஞ்சனையற்று உபதேசித்தான். சிறு வயது முதல், ஸம்ஸ்கிருதத்திலும் மலையாளத்திலும் அப்பியாசம் செய்வித்துத் தக்கவயதில் அஷ்டாங்கஹிருதயமுறைகளனைத்தையும் நன்கு கற்றுவைத்தான். ராமபட்டனுடைய தகப்பன் மிக்க பிரசித்திபெற்றவனாகையால் பலவூர்களுக்கும் சென்று வைத்தியஞ்செய்யும்பொழுது ராமபட்டனையு மழைத்துச்சென்று அவனையும் கைபார்க்கச்சொல்லி, அவனைமுன்வைத்தே ஏதுகாரியமும் செய்ததால் அனுபோகத்தால் தாதுப்பரீக்ஷையிலும், வியாதி யின்னதென்று தீர்மானிப்பதிலும், சிறந்த பயிர்ச்சியை யடைந்தான். வைத்தியனிருக்கும்பொழுதேமகனுக்குப்பிரசித்தி ஏற்பட்டுவிட்டது. ராமபட்டனுக்குத் தற்காலம் வயது அறுபதிருக்கலாம். காது கேட்பது கொஞ்சம் மத்திமம். முருகன் தன் வீட்டுக்குச்சென்று கஞ்சி குடித்து குழந்தைகளுடன் கொஞ்சி வார்த்தையாடிவிட்டு வைத்தியரிடம் வந்து 'புதிய அதிகாரி அவசரமாய்க் கூப்பிடுகிறார்' என்று தெரிவித்தான். 'என்ன விசேஷம்—யாருக்கு உடம்பு அசௌகரியம்' என்று வைத்தியர் கேட்டார். 'அவிங்க வீட்டுக்கொளந்தைக்கு ஜொரம்போலிருக்குதுங்க. நேரம் பண்ணப்படாதுங்க. வாங்க போகலாம்' என்று சொல்லிக்கொண்டு தன் கையிற்பிடித்திருந்த பூண்கட்டிய சதங்கைகள் தொங்கவிட்டிருந்த தடியைக் குலுக்கினான். காவல்காரன் விடும் வழியில்லையென்று தெரிந்த வைத்தியர் எழுந்து பல்விளக்கி முகத்தைக்கழுவி விபூதி தரித்து இடையில் சுப்பிரமான ஆடையுடுத்தி தலைக்குச் சரிகை முண்டாசு கட்டிச் சால்வையை மேற்போர்த்திச் சிறிய மருந்துப்பெட்டியை ஒரு பட்டுத் துணியிற்சுற்றிக்கமுக்கட்டையில்மறைவாய் வைத்து அதிகாரி வீட்டுக்கு முருகனுடன் வந்தான். பங்களாவின் வாசலில் சாய்வு நாற்காலியில் அதிகாரி முந்தியமாதத்திய 'விவேகபோதினி' சஞ்சிகையைப் பிடித்துச் சாய்ந்து வாசித்துக் கொண்டிருந்தார். முருகனுடனொருவன் வருவதைக்கண்டு 'டேய் ஒரு பலகாய் கொண்டுவந்து போடடா' என்று கட்டளையிட்டார். ஒரு சேவகனோடி பட்டகசாலையிலிருந்து ஒருமணையை எடுத்துவந்து நாற்காலியின் சமீபத்திலிட்டான். வைத்தியரும் வாயிற்படியண்டை வந்தவுடன், செருப்பைக் கழற்றிவிட்டு வணக்கத்துடன் கும்பிட்டுப் படியேறி, அதிகாரியண்டை போட்டிருந்த ஆசனத்தில்புன்சிரிப்புடனமர்ந்தார். வைத்தியருட்காரும்வரையவரையுற்றுப்பார்த்துக்கொண்டிருந்தராவ்பஹதூருக்கு அடங்காக் கோபம்வந்துவிட்டது. 'யாரடா இவன்—முட்டாள்-அயோக்கியப் பயல்—ஜம்பமாய் சரிகைமுண்டாசு கட்டிக்கொண்டு எனக்காகப் போடச்சொன்ன மணையின்மேல் கோத்திபோலுட்கார்ந்திருக்கான். சால்வைபோர்த்திக்கொண்டிருந்தால் ராங்கி யுயர்ந்துவிட்டது போல இருக்கு இந்தப் பயலுக்கு' என்று முதலியார் சொன்னபோது, சால்வை என்றசப்தம் காதில் கேட்டதும் வைத்தியர், 'ஆமாங்கஜமீன்தார்கொடுத்ததுங்க' என்று சால்வையின் கரையைப் பிரித்துக் காட்டினார். இதைப்பார்த்த ராவ் பஹதூருக்குக் கோபமதிகரித்தது. 'டேய் வாங்கடாஇங்கே—குடுக்கிற உதையிலே ஊரை விட்டோடவேணும் இந்த அம்பட்டன்' என்று அட்டகாசம்செய்தார். அதிகாரி முடிவிற் சொன்ன பட்டன் என்ற சொல், அரைகுறையாய் காதில் கேட்டதும் 'ஆமாம் என்பேர் ராமபட்டன்தான்' என்று கம்பீரமாய்ச் சொன்னார். முதலியாருக்குக் கண்ணிற் தீபறந்தது. 'டேய்-டலாயத்து—இங்கே வர்ஜாவர்ஜ மில்லாமற்போச்சுது. நான் டிப்டி கலெக்டராயிருக்கும்பொழுது இவனிப்படிச் செருப்புப் போட்டுக்கொண்டும் சால்வையைப் போட்டுக்கொண்டும் என்முன் ஆசனத்திலுட்காரத் துணிவானா; உடனே ஆறுமாதங் கடுங்காவலல்லவா? இவனைப் பிடித்து வாயிற் கம்பத்திற்கட்டி அவனுடயோகித்த செருப்பாலேயே யவன் முதுகிலைம்பதடி என் கண் முன் அடிக்கவேணும்' என்று அரவம் போட்டார். அதிகாரி சொன்னவற்றிற் சில வார்த்தைகளைக் கேட்டு ஏதோ கோபப்பதாக அபிப்பிராயப்பட்டு ஆசனததை விட்டெழுந்து கீழே இறங்கி நடந்தார். அப்பொழுதுதான் காஸிம், நாவிதனை யழைத்துக்

கொண்டு வாயிற்படியண்டை வந்தான். அம்பட்டனும் சாமி சாமி என்று அதிகாரியையும் வைத்தியனையும் கும்பிட்டு நின்றான். 'இவன் யாரடா; இவர்களுக்குள்ளேயே மரியாதை பலமாயிருக்கு' என்று சொல்லிக் காவலிமைக் கூப்பிட்டு "நீயேன் இன்னுமொரு அம்பட்டனையழைத்து வந்தாய்; உனக்குப் புத்தியிருக்கிறதா? ஒரு நாவிதனிடம்பட்ட அவமானம்போதாதா? அவனெங்கடா ஓடறான் பிடித்துக் கட்டுங்கோடா" என்று ராமபட்டனைப் பிடிக்கச் சேவகர்களை ஏவினான். அருகில் நின்றுகொண்டிருந்த டலாயத்து பிசகையறிந்து 'எஜமான்—முருகனழைத்துவந்தவர் இந்த ஊர்வைத்தியருங்க, அவர் பெயர் ராமபட்டன், நல்லமரியாதைக்காரருங்க. தாங்கள் சொன்னதைக் கேட்டுக் கோவிச்சுட்டுப் போறாங்கபோலிருக்குது' என்று சொல்லி ஓடி வைத்தியரைத் தடுத்து மீண்டும் வரும்படி வேண்டினான். 'செருப்பு கிறுப்பு என்று ஏதோ தாறுமாறாய்ப் பேசுகிறார். ஜமீன்தார்கூட என்னைக் கண்டவுடன் நாற்காலியிலுட்காரச்செய்து மரியாதைசெய்வார். மணையிலுட்கார்ந்ததற்கு இவருக்கிவ்வளவு கோபமா? இதைப்பற்றி நானரண்மனைக்குப் போகும்போது தெரிவிக்கிறேன்' என்று வைத்தியர் தனக்கு நேர்ந்த அவமானத்தை மனதில் வைத்துக்கொண்டு கோபத்துடன் வீட்டைநோக்கி விரைவாய் நடந்தார். அம்பட்டனை யழைத்துவரும்படி யனுப்பப்பட்ட முருகனுடன் கூடவந்தவைத்தியருடைய வேஷத்தாலும் நடையுடை பாவனைகளாலும் கமுக்கட்டையிலிருந்ததை யடப்பமென்றெண்ணியதாலும் முதலியார் இவனையோர் பிரபலமான ஜமீன் நாவிதனென்று மதித்தாராதலால் தானுட்கார்ந்து க்ஷவரம் செய்துகொள்ளப் போடப்பட்ட மணையில் அம்பட்டனமர்ந்ததைப் பார்த்த ஜமீனதிகாரியும் ராவ் பகதூர் பட்டம்பெற்ற பென்ஷன் டிப்டிகலெக்டருமான நம் முதலியாரிவரை யிதோடு விட்டதும் ராமபட்டனதிருஷ்டமென்றே சொல்லவேண்டும். தற்காலம் அதிகாரிக்கு மாஜிஸ்டிரேட் உத்தியோகமில்லாமலிருந்ததால் நிரபராதியான வைத்தியர் ஆறுமாதங் கடுங்காவலிலிருந்து தப்பஹேதுவாயிருந்தது.

முதலியார் முருகனை விளித்து'அம்பட்டனையழைத்துவரப்போன நீ, ஏனிந்தக் கர்னாடக வைத்தியனையழைத்துவந்தாய்?—அதிருக்கட்டும்,இவ்வூரில் நல்ல இங்கிலீஷ் வைத்தியம்தெரிந்த டாக்டரொருவருமில்லையா? இந்தப் பண்டிதக்கார பெக்கர்கள் யாருக்கு வேண்டும்? போனதேநல்லதாய்ப்போச்சு; வீரம்பூரம் என்று எதையாவது பச்சைவெட்டை வைத்துக் கொலைபண்ணிப் போடுவான். டாக்டருண்டா, இல்லையாடா' என்று அதட்டினார். 'பத்து மயிலுக்கப்பால் டவுனில் ஆஸ்பத்திரி டாக்டரிருக்கிறாங்கோ.' என்று முணுமுணுத்துச் சொன்னதை முழுவதும் செவிகொடாமல், டவுனுக்குச்சென்று டாக்டரை உடனே கூட்டிவரும்படி ஜமீன் வண்டியுடன் சிறிய டலாயத்தை யனுப்பினார்.

வபனம் செய்துகொள்ள ஆசனத்திலுட்கார்ந்தார். அம்பட்டன் க்ஷவரம் செய்துகொண்டிருக்கும்பொழுது உள்ளேகுழந்தையின் ரோதனசப்தம் கேட்டது. உடனே அதைப் போய்ப்பார்க்கப் பரபரப்புடனெழுந்ததால் கையிலிருந்தகத்திபட்டுமுதலியாரின் இடது தோள்பட்டையில் பலத்தகாயம்பட்டு இரத்தம் பெருகிற்று. முதலியாருக்குப் பிரமேகரோகம் உண்டாதலால் ரத்தத்தைக் கண்டதும் அவருக்கும், அவர் பாரியை, தாய் இவர்களுக்கும் பயம் பிடித்துக்கொண்டது. முதலியார் அம்பட்டனை பலமாய் ஐந்தாறடிகள் கைகொண்டடித்தார். இந்த அதிர்ச்சியால் ஜாஸ்தி ரத்தம் சுரந்தது. அடியையும் பட்டுக்கொண்டு அம்பட்டன் நல்ல வைத்தியனாதலால் எழுந்தோடி ஒரு பச்சிலையைக் கொண்டுவந்து அதைக்கையில் வைத்துக் கசக்கி, காயத்தில் வைக்க முயன்றான். முதலியாருக்குக் கோபமதிகரித்தது எல்லோரும் சேர்ந்து என்னைக் கொல்ல ஏற்பாடு செய்தீர்களா' என்று கையை மறுபடியுமோங்கினார். அம்பட்டன் பயந்து, 'பச்சிலை, காயத்தையுடனேஆத்திவிடும். கருப்பண்ணசாமி சாச்சியாச் சொல்லரேங்க, இல்லாட்டா என்னை எப்படி வேணு சிச்சியுங்கோ' என்றான். அவன் கன்னத்தில் பளீர் என்று ஒரு அரை கொடுத்துவிட்டு 'இந்த மூடர்களைக் கட்டிகொண்டு என்ன செய்கிறது? இப்படிப் பண்டிதர்களும் அம்பட்டர்களும் வைத்தியம்பண்ணத் தொடங்கித்தானே ஊரெல்லாம் பாழ்த்துப்போறது. இல்லாதேபோனா ஏனிப்படி ஜனங்கள் சாகிறது? முட்டாள்கள்—ரிஜிஸ்தர் செய்யப்படாத ஒரு வைத்தியனையும் நம்பக்கூடாது. நம்பினால் தலைக்குக் கல்லுதான்' என்று சொல்லி, ரத்தத்தைத் துடைத்து ஈரத்துணியை வைத்துக் கட்டினார். இவருடைய வயது முதிர்ந்த தாய்,பச்சிலையை வைத்துக்கட்டிக் கொள்ளும்படி கெஞ்சியும் கொஞ்சமேனு மிடங் கொடுக்கவில்லை. 'கர்னாடகம், உனக்கென்ன தெரியும்' என்று அதட்டி யனுப்பி விட்டார். நாவிதனும் வேலையைப் பூராவையும் செய்து முடிப்பதற்குள் இனியுமெவ்வளவு பிரகாரங்கள் கிடைக்குமோவென்று சரீரமாத்தியந்தம் நடுக்கமுற்றுக் கையிலெடுத்த கத்தியைக் கீழேவைத்துவிட்டு நின்றான். ராவ் பஹதூருக் கென்னசெய்வதென்று தோன்றவில்லை. கைநடுக்கத்துடன் அவனை வேலை செய்யச்சொல்வது தனக்கே அபாயமென்றறிந்து வேறு நாவிதனை யழைத்துவரும்படி உத்திரவு செய்தார். முன் செய்தவனுடைய விசேஷ வேண்டுகோளில்லாமல், அரை வேலையில் மற்றொருவன் வந்து பாக்கி வேலையைச்செய்து முடிப்பது அத்தொழில்காரர்களுக்குள் வழக்கமில்லை. அதிகாரியின் சுபாவத்தையறிந்த இந்நாவிதனுக்கும் இவ்வேலையை முடிக்கச் சிபார்சுசெய்யத் துணியான்

டலாயத்தும் வேறு சேவகர்களும் அம்பட்டர்களை ஊரெங்கும் தேடத் தொடங்கினார்கள். இதற்குள் நாவிதனுக்குப் பிரஹாரம் கிடைத்த சங்கதி ஊரெங்கும் பரவியதுமன்றி அன்று சனிக்கிழமையாதலால் நாவிதர்கள் தங்கள் தொழில் செய்யுமிடங்களில் கூடாமல் கள்ளைக்குடித்து ஊரைவிட்டு வெளியே ஒரு மாரியம்மன் சாவடியில் சூதாடிக்கொண்டிருந்தார்கள். யோக்கியர்கள் வேறு வேலையைச் செய்யும் வியாஜமாய் வெளியேகியிருந்தார்களாகையால் சரியான தொழிற்காரனகப்படுவது அசாத்தியமாயிருந்தது. சாவடியிற் சூதாடும் துப்பறிந்த ஒரு படன் அங்கு ஓடி அவர்களை யழைத்தான். சூதாடுவதற்காக தண்டிக்கக் கூப்பிடுகிறானென்று பயந்து 'இதோ வருகிறோ'மென்று சொல்லி அங்குமிங்கும்போய் மறைந்து கொண்டார்கள். நாவிதர்களைத் தேடிப் படர்கள் திரிகிறார்களென்று தெரிந்து பயம்பிடித்து ஒவ்வொருவரும் அங்கங்கே பதுங்கினார்கள். டலாயத்து வெகு தந்திரம் செய்தும் சரியானவன் யாரும் கிடைக்கவில்லை. முடிவில் ஒருவயதுமுதிர்ந்த கிழவனை யடப்பத்துடனழைத்து அதிகாரியினிடம் கொண்டுபோய் நிருத்தினான். 'ஊரில் இந்தக் கிழந்தானடா அகப்பட்டது. வேறே யாருமில்லையா' என்று சொன்னார். இதனுள் வந்தகிழவன் தன்னுடைய பழைய கிழிந்துபோன அடப்பத்தை எடுத்து முன்னால் வைக்கப்போகையில் அசைவுற்றசொறியும் ரத்தகாயங்களுமுள்ள அவன் கைகளிலிருந்து அது கீழே விழுந்து பல ஆயுதங்களும் சிதறின. தண்ணீர்வைக்கும் கிண்ணம், முதலியார் மடியில் விழுந்தது. முதலியார் வெறுப்புடன் அதையெடுத்துக் கிழவன்பேரில் எறிந்தார். கிழவனுக்கு முழங்காலில் காயம்பட்டது. எல்லா சாமான்களையும் பொறுக்கி அடப்பத்திலிட்டு நொண்டிக்கொண்டு வீட்டை நோக்கிச் சென்றான். மறுபடியும் பழைய நாவிதனைக் கூப்பிட்டு நல்ல வார்த்தை சொல்லி, வேலை செய்ய உத்திரவு கொடுத்தார். அவன் வெகு நிதானத்துடனருகே வந்து கத்தியை எடுத்துத் தோலின்மேல் துடைக்கும்பொழுது அதிகாரி மீசையின் நுனிகளை முறுக்கினார். இதைத் தற்செயலாய்ப் பார்த்ததும், அம்பட்டன் கையிலிருந்த கத்தி நழுவிக் கீழே விழுந்தது. உடனே தலையிலொரு குட்டைச், சம்மானமாகப்பெற்றுப் பயந்து ஒதுங்கி நின்றான். இதற்குள் மணி இரண்டாச்சுது. அதிகாரிக்குக் காலைக் காப்பிமட்டுந்தான் ஆயிருந்தது. க்ஷவரம் முடிந்து ஸ்நானஞ் செய்தல்லவோ போஜனம் முடிக்கவேண்டும். இந்த சமயத்தில் டவுனுக்குப்போயிருந்த வண்டியின் சப்தம் காதில்பட்டது. அங்கு நின்ற அம்பட்டனும் உத்திரவில்லாமல் மறைந்துவிட்டான். 'டாக்டர் வந்துட்டாருங்க' என்று ஒரு சேவகன் ஓடிவந்து சொன்னான். முதலியாருககு முகத்தில்மட்டும் அர்த்தக்ஷவரமாயிருந்தது. வேறு அம்பட்டனும் அகப்படவில்லை. என்னசெய்வதென்று ஏக்கம் பிடித்திருந்தார். டாக்டர் வண்டியை விட்டிறங்கி முதலியாரிடம் வந்து (குட் மார்ணிங்) என்று கையை நீட்டினார். முதலியார், அம்பட்டன் தீட்டானதால், தன் கையை நீட்டாமல் "தயவு செய்து உட்காருங்கோ. நான் க்ஷவரம் செய்துகொண்டிருக்கிறேன். இன்னும் முடிந்தபாடில்லை. காயப்படுத்தியதாலவனை முடிக்கிவிட்டேன். வேறே யாருமகப்படவில்லை. இந்தக் காயத்தைப் பாருங்கோ; வலிக்க ஆரம்பித்துவிட்டது. எனக்குப் பிரமேக வியாதியுண்டு' என்று தோளைக் காட்டினார். டாக்டர் அதைப் பரிசோதித்து 'குழந்தைக்கு ஜுரம் என்று சொன்னதால் அதற்குமட்டும் மருந்து கொண்டுவந்தேன், இதற்கு வேண்டிய சாதனங்களில்லை. இந்த விவரம் தெரிந்திருந்தால் (டிரஸ்) செய்யச் சாமானெல்லாம் கொண்டுவந்திருப்பேன். (நெவர் மைண்டு) என்று கொஞ்சம் வெந்நீர் ஜலத்தைவிட்டு காயத்தைக் கழுவிக் கொஞ்சம் பஞ்சை நனைத்துப்பிழிந்து கட்டிவிட்டார். முதலியாருக்கு அம்பட்டனுடைய பாதை பெரியதாயிருந்தது. இதைப்பற்றி டாக்டருடன் பலமுறை சொன்னார். டாக்டர் தினம் முகக்ஷவரம் செய்துகொள்ளும் வழக்கமுள்ளவராகையால் அந்த வித்தையில் கொஞ்சம் பயிற்சியுண்டு. நெவர் மைண்டு என்று சொல்லி முதலியாரின் சொந்தக் கத்தியைக்கொண்டு முகத்தில் பாக்கியையும் க்ஷவரம் செய்துவிட்டார். 'இன்று தலை தப்பினது தம்பிரான் புண்ணியமாதலால் தலை க்ஷவரம் நாளைக்காகலாம்'என்று சொல்லிக் குழந்தைக்குக் கையைப் பார்க்கும்படி டாக்டரை உள்ளேயனுப்பி தான் ஸ்நானஞ்செய்துவந்தார். 'குழந்தைக்கு நல்ல டைபாய்டு பீவர் (Typhoid fever) என்று அவர் வந்தவுடன் சொன்னார். அதைக் கேட்டதும் முதலியாருக்குப் பயம்பிடித்தது. 'அதிருக்கட்டும். நீங்கள் ரிஜிஸ்டர்டு டாக்டர்தானே' என்றார் முதலியார். 'ஆம்—நான் கவர்ன்மெண்டு ஆபீசர்—அஸிஸ்டண்டுசர்ஜன்' என்றார். ஆனால் பயமில்லை. ஸார் என்குழந்தை பிழைக்கும், என் காயமும்சொஸ்தமாகும். நாட்டுவாக்ஸ்களெல்லாரையுமெப்படி ஸார் நம்புகிறது? நான் மாஜிஸ்திரேட்டாக ஆக்டிங்கானது முதல், டிப்டி கலெக்டராகி நாளதுவரை ஒரு நேடிவ் வைத்தியனையும் கண்ணாலேகூடப் பார்த்ததில்லை ஸார். அது உங்களுக்குத்தெரியுமா ஸார்' என்று சொல்லிவிட்டு முதலியார் போஜனம் செய்ய உள்ளே சென்றார்.

(இக்கதை அடுத்த சஞ்சிகையில் முடிவுபெறும்.)

'திராவிடாபிமானி'' ** இதில கல்வி, வியவஸாயம், கைத்தொழில், மத ஸம்பந்தமான விஷயங்கள், மற்றும் பல சமாசாரங்களும் அடங்கியிருப்பதோடு ஸ்திரீகளுக்கான பக்கங்களும் சிறுவர்களுக்கானபக்கங்களும் நன்றாய் எழுதப்பட்டிருக்கின்றன. ** தன் பேருக்கேற்ப இப்பத்திரிகை அறிவைப் பரவச் செய்யும் என்பதற்கு ஐயமில்லை.

# மாதவீகங்கணம்

மூன்றும் பாகம்

## அத்யாயம், 1

### பாணிக்ரஹணம்

நவகுமாரரும் அவருடைய தர்மபத்னியும் பலவருஷ காலங்கழித்து மறுபடியும் தேவிபுரத்துக்கு வந்தார்கள். வெகு நாள் பர்யந்தம் தாம் இழந்திருந்த மன்னனைத் திரும்பவும் தமதுநாட்டில் வரப்பெற்ற தேவிபுர ப்ரஜைகளுக்குப் பரமஸந்தோஷம் உண்டாயிற்று ஊரெல்லாம் ஒரே ஆனந்தம். எங்கு பார்த்தாலும் குதூகலம். அன்றையதினம் ஜமீனிலுள்ள நாடு நகரங்கள் எல்லா விடங்களிலும் பண்டிகை கொண்டாடப்பட்டது. சுற்றுப் பக்கத்து க்ராமங்களிலிருந்து ஜனங்கள் திரள்திரளாய்த் தேவிபுரத்துக்கு வந்துகொண்டிருந்தனர். தங்களுடைய பழய ஜமீன்தார் தமது நாட்டைத் திரும்பப்பெற்றுக் களிப்புற்றிருப்பதைக்காணும்நிமித்தம் குடிகள் அரண்மனை வாயிலண்டை கூட்டங்கூட்டமாய்க் கூடியிருந்தனர். அழகிற் சிறந்த பெண்ணரசியாம் ஹேமலதையைக் காணவந்த மங்கையர்கள் எல்லோரும் அக்கன்னிகையின் அழகையும், அவளுக்கேற்ற புருஷனையும், அவளுடைய கல்யாணத்தையும் பற்றியே இடைவிடாமல் பேசிக்கொண்டிருந்தார்கள். அந்தப்புர முழுதும் விவாக வர்த்தையே சப்தித்துக் கொண்டிருந்தது. என்னதான் நவகுமாரரும் ஹேமலதையும் இருந்து விட்டாலும், கோகுலதாஸை மறந்து விடலாமா? அவரைச்சுற்றி அவரைப்போன்ற வயோதிகர்களான ப்ரபுக்கள் சிலர் காணப்பட்டனர். கொஞ்ச காலத்துக்குள் தேவிபுர ஜமீனும் அதை ஸம்பந்தித்த உலகவர்த்தமானங்களும் அடைந்த நானாவித மாறுபாடுகளையும் அதிர்ஷ்ட துரதிர்ஷ்ட மாறுதல்களையும்பற்றி எல்லாம் பகவானது செயலெனப் பேசிக்கொண்டிருந்தனர். எல்லாம் பத்து இருபது வருஷங்களுக்குள் வங்காள ராஜ்யத்தில் ஏற்பட்ட வேறுபாடுகளைக் கண்டு அவர்கள் அதிசயித்தார்கள். கிணறு குளங்களண்டை கூடியிருந்த ஸ்த்ரீகள் நவகுமாரரின் மனைவியினுடைய நற்குண நல் நடத்தைகளைப் பற்றியும், அவளுடைய பரோபகார சிந்தையைப்பற்றியும், அவள் தனது நாதருக்கு நேரிட்ட கஷ்ட நஷ்டங்களைக் குறித்து அல்லும் பகலும் தெய்வங்களுக்கு முறையிட்டுக் கொண்டதைப்பற்றியும்,ஸ்வாமி அவளுடைய ப்ரார்த்தனைகளைச் செவிசாய்த்துக் கேட்டுக் கடைசியில் அவளுடைய மனோபீஷ்டத்தை நிறைவேற்றி வைத்த விதத்தைப்பற்றியும் ஒருத்தியுடன் ஒருத்தி ஓயாமல் பேசிக்கொண்டிருந்தார்கள். இவ்வாறாக அன்றையதினம் முழுவதும் நவகுமாரர் பெற்ற பேரையும் பதவியையும் பற்றிப் புகழ்வதிலேயே கழிந்தது.

உண்மையில், நவகுமாரருக்கு உண்டான ஜயத்துக்கு முக்ய காரணம் தெய்வமன்று. கோகுலதாஸ் சலிக்காமல் இரவும் பகலுமாய் உழைத்ததின் பயனாக தேவிபுரம் நவகுமாரருக்குக் கிடைத்தது. இந்த உண்மை நவகுமாரருக்கே நன்கு தெரியும், "கோகுலதாஸ், நீர்தான் எனக்கு ஆப்த மித்ரர். அந்தக்கரணசுத்தியாய் நீர் என் விஷயத்தில் உழைத்ததின் பலன் இப்போது ஸித்தித்தது கஷ்டம் வந்தசாலத்து என்னை விட்டுப் பிரியாது என்னுடனே யிருந்து, எனக்குத் தேறுதல் கூறிக்கொண்டு அதே ஸமயத்தில் என் நன்மையைக்கோரி எவ்வளவோ உழைத்துவந்த தங்களுக்குத் தக்க கைம்மாறு என்ன செய்யப்போகிறேன்! நானும் என் குடும்பத்தாரும் மாத்ரமேயன்று; தேவிபுரத்துக் குடிகளெல்லோருங்கூடத் தங்களுக்குக் கடமைப்பட்டிருக்கிறார்கள். உம்மாலன்றோ, தேவிபுரமும் தேவிபுரத்து அதிபதியும் தம் பழையநிலைமையை அடைந்தனர்? ஜமீனினுடைய பெயரையும் கீர்த்தியையும் நாசமுறாமல் காப்பாற்றிய புருஷர் கோகுலதாஸ்தான் என்பதற்குச் சிறிதளவும் ஐயமில்லை."

"ப்ரபு, அடியேன் இவ்வளவு மர்யாதைக்கு அருகனன்று. நம்முடைய யத்தனத்தில் என்ன இருக்கிறது? எல்லாம் பகவானுடைய க்ருபை. காலம் வந்துவிட்டால் எல்லாம் தானே நடந்தேறுகிறது. மனுஷ்ய ப்ரயத்னத்தில் என்ன இருக்

கிறது? வேளை ஒத்துக்கொண்டால் நமக்கும் அதற்கேற்ப புத்தி தோன்றுகிறது. எல்லா வற்றிற்கும் தங்களுடைய நல்லதிர்ஷ்டம் தான் முக்யமான காரணம். ஈச்வர க்ருபை யிருக்கவேண்டும். என் ஆயுள் முடிவதற் குள் இன்னொரு ஜமீனும் தேவிபுரத்துடன் சேரவேண்டும்.. அதுதான் என் மனப்பூர்வ மான கோரிக்கை."

"கோகுலதாஸ் இருக்குமட்டும் ஒன்றுக் கும் குறைவு வராது. அவர் போடுகிற முடி, பலமான முடியாய்த்தானிருக்கும். இருந் தாலும் சிறிது ஜாக்ரதையாயு மிருக்கவேண் டும். யானைக்கும் அடிசருக்கும். எவ்வளவு ஸாமர்த்யவானு யிருந்தாலும், சில வேளை களில் அவன்கூட ஏமாந்துவிடுகிறான். ஆகை யால் கருத்தாயிரும். இந்த விஷயங்களில் என்னிடமிருந்து தாங்கள் அறிந்துகொள்ள வேண்டியது ஒன்றுமில்லை."

நவகுமாரருடைய மனைவியோ கோகுல தாஸைப்பற்றி யொன்றும் பெருமையாய்ப் பேசவில்லை. பராமுகமா யிருந்துவிட்டாள். அவள் அவருடன் முகங்கொடுத்து வார் த்தை சொல்லவில்லை. அவளைக் காண்பவர் கள் யாவரும் அவள் உலகவாழ்க்கையில் அதிகப் பற்று வைக்காமல் வரவர அவ்வி ஷயங்களில் அசட்டையா யிருக்கிறாளெனக் கூறலாயினர். ஸதாஸர்வகாலமும் 'பூஜையும் பூஜாக்ருஹமுமே தொழிலாயிருந்தனள்.'

ஸம்ஸாரத்தில் என்னதான் வெறுப்புக் கொண்டாலும், பால்ய நாட்களின் சுகங் களும் அப்போதைய அனுபவங்களும் எளி தில் மறக்கக்கூடியவைகளோ! அந்த அரண் மனையில் எங்கு சென்றாலும் அவளுக்குத் தன் யௌவன பர்வத்தின் ஞாபகங்களே வந்துகொண்டிருந்தன. தான் அந்த க்ரு ஹத்துக்குப் புதிய மருமகளாய் வந்த நாளும், அப்புறம் தான் யஜமானியாய் அவ் விடத்தில் உலாவிய நாட்களும், தன் பிறந் தகத்து நினைவுகளும் அவள் மனதில் உதித் துக்கொண்டே யிருந்தன.

அரண்மனையும், நந்தவனங்களும், கோயில் களும் குளங்களும், தோப்புகளும் துறவு களும் யாவும் முன்போலவேதான் இருந் தன. ஒன்றும் வேறுபாடடையவில்லை, ஆனால் யௌவனபர்வத்தில் அவளுடைய மனதை ஸந்தோஷிப்பித்த எண்ணங்களும் நினைவுகளும் மறைந்துவிட்டன. வஸ்து முன் வஸ்துதான்; அவற்றைப் பார்க்கும் கண்ணுடிமாத்ரம் மாறிவிட்டது. அந்தக் காலத்தில் ஸூர்யோதய ஸூர்யாஸ்தமன ஸமயங்களில் அவள் அனுபவித்த உத்ஸா ஹமும் குதூகலமும் அடியோடு போய்விட் டன. இப்போது காலை ப்ரகாசம் கழிந்து விட்டது; மாலை இருள் வந்து மூடிக்கொண் டது. வ்ருத்தாப்ய தசை தொடங்கிவிட்டது. இவ்வுலக இன்பங்கள் அனைத்தையும் வெ றுத்தனள். வருங்கால சிந்தனையே அதிக மாயிற்று. போகிற வழிக்கு ஏதாவது புண் யம் தேடத் தலைப்பட்டனள். முன்னரே அவள் சிறந்த தெய்வபக்தியும் ஆசாரமும் உடையவள் எனக் கூறியிருக்கின்றோம். இப்போது அக்குணங்கள் பதின்மடங்காய் அதிகரித்தன. ஸம்ஸார பந்தங்களினின்று நீங்கிப் பிறவிக்கடலைக் கடந்து பகவானது பாதகமலங்களை யடையும் நாள் என்றோ என ஏங்குவாளாயினள். எப்போதும் இதே சிந்தனையாய்த்தான் இருந்தனள்.

விவாஹமாகித் தேவிபுரத்து ராணியாய் வந்தபின்புதான் அவள் கோகுலதாஸை முதல்முதல் கண்டாள். அவனுடைய எழ் மையையும் அவனுடைய சாந்த குணத்தை யும், அடக்கத்தையும் கண்டு அவன்மீது கருணை கூர்ந்தாள். அதுமுதற்கொண்டு அவரைப் பரிவாய் நடத்திவந்தாள். அவரும் செய்நன்றி மறவாமல் அவள் விஷயத்தில் அதிக பக்தியாய் நடந்துவந்தார். பல வரு ஷங்கள் கழிந்தன. அவர் தம் கூர்மை யான புத்திசாதுர்யத்தாலும், அரிய ஸாமர் த்யத்தாலும் வெகு சீக்ரத்தில் நல்ல பத விக்கு வந்துவிட்டார். ஜமீன்தாரரும் அவரு டைய அரிய குணங்களை மெச்சி, அவரை உயர்பதவிக்குக் கொண்டுவந்தார். இவற்றை யெல்லாம்கண்டு நவகுமாரர் மனைவி ஸந் தோஷித்தாள். தன்னைப்போலவே தனது புருஷரும் கோகுலதாஸின் குணதிசயங் களைக் கண்டு மெச்சுகிறாரெனக் கேட்டு அவள் த்ருப்தியடைந்தாள்.

இப்படியிருக்கையில் நவகுமாரர் தேவிபுரத்தை விட்டு நீங்கவேண்டிய காலம் வந்தது. கோகுலதாஸும் நவகுமாரர் குடும்பத்துடன் சென்றார். அந்தக் கஷ்டகாலத்தில் கோகுலதாஸ் நவகுமாரருடைய ஆப்தமித்ரராயிருந்தாரெனக் கூறினோம். இக்காரணத்தால் நவகுமாரருடைய மனைவி அடிக்கடிக் கோகுலதாஸை ஸந்திக்கவேண்டியிருந்தது. கோகுலதாஸரும் நவகுமாரரும் உடலும் நிழலும்போல் பிரியாமலிருந்தனர். கோகுலதாஸ் நவகுமாரருடைய குடும்பத்தைச்சேர்ந்தவர்போலிருந்தார். தேவிபுரத்து ராணியும் நாளடைவில் கோகுலதாஸ் முன்னிலையில் முகத்தை மூடிக்கொள்ளும் வழக்கத்தை விட்டுவிட்டாள். அடிக்கடி அவர்கள் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருப்பார்கள். பழகப்பழக கோகுலதாஸின் சூழ்ச்சிகளும், அவருடைய நோக்கங்களும், அவருடைய அந்தரங்க மனோ லக்ஷ்யங்களும் அவளுக்குச் சிறிது புலப்பட்டன.

"நாதா, அவருடைய முயற்சி வீண்போகாது. நமது ஜமீனைத் திரும்பப் பெறுவோம். அதற்கு ஸந்தேஹமில்லை" என்று நவகுமாரரிடம் அவருடைய மனைவி கூறினாள்.

"நீயன்றோ அம்மனிதனைத் தெரிந்தெடுத்தனை. உனது முன் யோசனை வீண்போகுமா? உண்ணும் உணவிற்கும் உடுக்கும் ஆடைக்கும் பிறர் கையை எதிர்பார்த்து நின்ற அம்மனிதன் வெகு சீக்ரத்தில் தன்னிடமிருக்கும் அரிய சக்தியைக் காண்பித்து முன்னுக்கு வந்தான். அவன் அது முதற்கொண்டு எனக்குப் பெருந்துணையாயிருந்து வருகிறான். அவன் நமது விஷயத்தில் உயிருள்ளமட்டும் நம்பிக்கையாய் உழைத்து வருவான்."

கோகுலதாஸ் ஜயமடைந்தார். நவகுமாரர், வீரநகர் தேவிபுர ஸமஸ்தானங்களுக்குக் கார்யஸ்தரானார். புத்ர ஸம்பத்து இராவிட்டாலும் ஒரு புத்ரி ஜனனமானாள். நவகுமாரருக்கு நல்ல காலம் வந்தது. தவப்புதல்விக்கு ஹேமலதை—அதாவது, பொற்கொடி—எனப் பெயரிட்டழைத்தார். புத்ரி ஜனன காலமும், நவகுமாரருக்கு ஜமீன் திரும்பிக்கிடைக்குங்காலமும் ஒத்துக்கொண்டன. நவகுமாரரும் அவருடைய மனைவியும் ஸந்தோஷமாயிருந்தனர். குழந்தை வளர வளரப் பெற்றோர்களுக்கு அதன்மீது அத்யந்த ஆசை உண்டாயிற்று. ஹேமலதை அன்பெனும்கொடியால் தன் மாதாபிதாக்களின் மனதைக் கட்டினாள்.

ஹேமலதையின் தாயார் நவகுமாரரைப் பார்த்து ஒரு நாள், "நாதா, என் ப்ராணனையெல்லாம் நான் நமது கண்மணியிடம் வைத்திருக்கிறேன். அவள்தான் எனக்கு உலகம், என் உயிருள்ளமட்டும் நான் ஒரு க்ஷணமும் அவளைப் பிரிந்து இருக்கமாட்டேன். நானிருக்கும் வரையில் அவள் என்னுடன் தானிருக்கவேண்டும்."

"கண்மணி, நீ அவளைப் பிரிந்து இருக்கமாட்டேன் என்றால் நான் மாத்ரம் பிரிந்திருப்பேன் என்று அர்த்தமா? நான் பிள்ளையொன்றும் வளர்த்துக்கொள்ளப் போவதில்லை. அவளையே நான் புத்ரனாகப்பாவித்திருக்கிறேன். நரேந்த்ரன் வீரநகரத்துக்குரியவன். ஹேமலதை தேவிபுரத்துக்குரியவள்."

ஆனால் நாம் நினைத்ததெல்லாம் நிறைவேறுகின்றதா? அப்படி நிறைவேறிவிட்டால் இவ்வுலகில் மனிதர்களுக்குக் கஷ்டமேது, துக்கமேது, சண்டை சச்சரவுகளேது? சீக்ரத்தில் வெவ்வேறு ஸங்கடங்கள் ஏற்பட்டன. நவகுமாரரின் மனம் வேறுபட்டது. அவருடைய ஆசைகளும் அவாக்களும் வேறு வழிபட்டன. வீரநகரப் பகை அவருக்கு அதிகமாகிவிட்டது. எவ்வளவு பதிபக்தியிருந்தாலும், பிறந்தகத்து ஆசை அகன்றுவிடுமா? அதுவும் பிறந்தகத்தாரைப் பகைத்துத் தூஷித்து அவர்களுக்கு த்ரோகம் செய்ய உத்தேசித்தால் என்னதான் பதிவ்ரதா சிரோமணியாய்த்தான் இருந்தாலும் மனம் பொறுக்குமா! நவகுமாரரின் மனைவி வீரநகர்ப்பெண் என்பது ஞாபகமிருக்கும். ஸ்திரீ புருஷர்களுக்குள் சிறிது அத்ருப்தி உண்டாயிற்று. முன்போல ஸம்பாஷணைகள் அவ்வளவு அதிகமாயிருப்பதில்லை. அவள் தன் புருஷனை ஒரு கேள்விகூடக் கேட்கவில்லை. நாளடைவில் அனைத்தையும் குறிப்பாய் உணர்ந்துகொண்டனள். இது முதற்

கொண்டுதான் அவளுக்குக் கோகுலதாஸின்மீது ஸந்தேஹம் ஜனித்தது.

கோகுலதாஸ் எப்போதும்போலவே அவளிடம் மர்யாதையாயிருந்தார். ஆனால் அவர் வரவர இப்போது முன்போல் அவளிடம் தன் மனதைவிட்டுச் சொல்வதை நிறுத்திவிட்டார். அவளுடன் கூடி ஆலோசிக்கும் வழக்கமும் நின்றுபோய்விட்டது. பார்த்தபோதெல்லாம் மர்யாதையாய்த் தலை குனிந்து வணக்கமாய் இரண்டொரு வார்த்தை பேசிவிட்டுப் போய்க்கொண்டிருந்தார். பால்யம் முதற்கொண்டு அவள் அன்புகூர்ந்து சொந்தப்பிள்ளையைப்போல் தன் கையால் வளர்த்துவந்த சிறுவன் இப்போது 'வளர்த்த கடா மார்பிலுதைத்த' வாறு, மஹா சதியோசனைக்காரனாகி ஸந்தேஹத்துக்குப் பாத்ரனானான். ஒருகாலத்தில் கேவலம் தாழ்ந்த வேலைக்காரன் அந்தஸ்திலிருந்த மனிதன் இப்போது உண்மையில் தேவிபுர வீரநகரங்களாகிய இரண்டு ஜமீன்களுக்கு அதிகாரியாய் விளங்கினான். இப்போது அவருடைய செல்வாக்கின் மகிமையென்ன? தன் கருத்துக்கு விரோதமாய் எண்ணங் கொள்பவர்கள், நண்பர்களாயிருந்தும் சரி, பகைவர்களாயிருந்தாலும் சரி, அவர்கள் யாவரையும் த்வம்ஸம் செய்துவிடுவதே உத்தமமெனக் கங்கணங் கட்டிக்கொண்டார். அவர் தன் பூர்வ சரிதையைப்பற்றிக் கிஞ்சித்தேனும் கருதவில்லை. மனிதர்களது துன்பத்தையும் வருத்தத்தையும் அவர்களுடைய மனோநிலைமையையும் அவன் துரும்பாக நினைத்தான். தன் எண்ணம் நிறைவேறும் நிமித்தம் எது செய்யவேண்டுமானாலும் அவன் துணிந்திருந்தான். தயை, தாக்ஷண்யம், நன்றி யாவற்றையும் மறந்தான். தன் கார்யம் கைகூடும் பொருட்டு, அவசியமானால் தனது ஆப்தமித்ரனைக்கூடக் கண்டதுண்டஞ் செய்யப் பின் வாங்கமாட்டான். அந்தோ! நவகுமாரர் அவருடைய கையில்நன்றாய்ச் சிக்கிக்கொண்டார்.

நவகுமாரர் என்றைக்குமே ஒருவகைப் பட்ட மனிதர். அவருடைய குணம் அடிக்கடிமாறிக்கொண்டேயிருக்கும். நாளடைவில் அவர் அதிகக் குரூரமுடையவரானார். யாரைக் கண்டாலும் பழிக்கத் தலைப்பட்டார். எப்போதும் கோபமும் சிடுசிடுப்புமாயிற்று. அவர் பால்யத்தில் அஞ்சாநெஞ்சராயும் திடசித்தமுடையவராயுமிருந்தார். எத்தனையோ கஷ்ட நிஷ்டூரங்களுக்கிடையிலும் அவர் மனோநிலைமை மாறுதலடையாமலிருந்து வந்தது. அப்பேர்ப்பட்டவர் இப்போது சலன புத்தியுடையவரானார். எதையும் குற்றங்கூறுவதும், எவரையும் தூஷிப்பதும் தொழிலாயிற்று. ஸ்வயபுத்தியும் ஸ்வயசித்தமும் இராமல் போய்விட்டது. ஸர்வ விஷயங்களுக்கும் பிறர்கைப் பதுமையாயினர். அவருடைய மனைவிக்குத் தன் கணவனாரது நல்ல குணங்களெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாய் மறைந்துகொண்டு வருவதும் அவற்றிற்குப் பதிலாய் துர்க்குணங்கள் தீவிரமாய்ப் படிவதும் தினேதினே விசிதமாய்ப் புலப்பட்டு வந்தன. அவள் மனம் குன்றினாள். வாய்விட்டுச் சொல்லக்கூடாமல் மனதிலேயே எண்ணியெண்ணி வருந்தலானாள். அவள் இப்போது தலைநிமிர்ந்து பார்க்கக்கூட நடுங்கி, ஒரு ராக்ஷஸனது வலையிலகப்பட்டுத் தன் புருஷனுடைய ஸ்வயபுத்தி ஸ்வயயோசனை யாவும் அடியோடு அழிந்து அவருடைய மனம், குணம், எண்ணம் யோசனை, நடத்தை, யாவும் 'புயல் காற்றில் பட்ட மரக்கலம்போல்' அலைவதைப் பார்த்துப் பார்த்து ப்ராணன் துடித்தாள்.

---

முதயோகம்.—அமிர்தயோகம்; அது ஞாயிற்றுக்கிழமையின் மூலம், திருவோணம், ரேவதி, ஹஸ்தம், ரோகிணி, உத்தரம், உத்தராடம், உத்தரட்டாதியாகியநக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், திங்கட்கிழமையின் மிருகசிரம், சோதி, ரோஹிணி, புனர்பூசம், திருவோணமாகிய நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், செவ்வாய்க்கிழமையில் ரோகிணி, மூலம், உத்தராடம், உத்தரம் ஆகிய நக்ஷத்திரங்களி லொன்று, வருங்காலம் புதன்கிழமையிற் பூரம், பூராடம், பூரட்டாதி, உத்தராடம், கார்த்திகை, உத்தரமாகிய நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், வியாழக்கிழமையிற் புனர்பூசம், சோதி, பூசம், அச்வனி மகமாகிய நக்ஷத்திரங்களிலொன்றுவருங்காலம், வெள்ளிக்கிழமையின் மூலம் ஹஸ்தம், ரேவதி, அச்சுவனியாகிய. நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம், சனிக்கிழமையின் மகம் சோதி, கார்த்திகை, ரோஹிணி, சதயமாகிய நக்ஷத்திரங்களிலொன்று வருங்காலம்.

# உலக ஸம்பவங்கள்
# How the World moves

மேலரங்கத்தில் சண்டை ஒரே விதமாகத்தான் இருக்கிறது. ஜனச் சேதத்திற்களவேயில்லை. ஆயினும் முடிந்த காரியமாக ஒன்றும் நடந்ததாகத் தெரியவில்லை. பிரஞ்சு துருப்புகள் இப்பொழுது முன்னிலும் வலிமையுடனும் பொறுமையுடனும் சண்டையிடுவதால் ஜர்மனியின்பக்கம் ஜயம் அதிகமாகக் கிடைக்கவில்லை ஆயினு மிடையிடை ஏதேனும் ஜயம் சிறிது கிடைத்தால், அந்த ஜயத்தை மலையாகச் செய்து அந்நாடு பிரசுரிக்கின்றது; அல்லாமலும், அநேகம் பொய்களையும் உத்தியோக முறையில் கூறித் தமது நிலைமை ஸ்தாபிக்கவேண்டியிருக்கிறது. ஜர்மானியரால தகர்க்கப்படும் வேர்டன் கோட்டை விழ முடியாதென்றே எண்ணப்படுகிறது. அப்படியிருக்க, ஜர்மானியர் அதன்மேல் லக்ஷ்யம்வைப்பதின் காரணமென்னவோ தெரியவில்லை!

நடுவரங்கத்தில் ரஷ்யர்கள் ஆஸ்டிரிய நாடாகிய கலீஷியாவில் மெதுவாக நுழைய வாரம்பிக்கின்றனரெனத் தெரியவருகிறது. ரஷ்யத் துருப்புகள் பகைவரது துருப்பை அசையவொட்டாது மடக்கிக்கொண்டிருக்கின்றன. ஆனல் முக்யமாக நடக்குங்காரியங்கள் ரைகா என்னும் பட்டணத்தைச் சுற்றியே இரண்டு தரப்புக்களிலும் நடக்கின்றன. இவ்விடம் பெருமாயத்தங்களைக் கடல் தரை இவற்றின் மூலமாகச் செய்து, பகைவரைத் தாக்கி, அவரது தலைநகராகிய பெட்ரோகிராட் என்னும் நகரையும் கைக்கொள்ள ஜெர்மானியர் யத்தனம் செய்வதாகத் தெரியவருகிறது.

துருக்கியின் தலைப்பட்டணமாகிய கான்ஸ்டாண்டிநோபிளில் க்ஷாமம் குடிகொண்டிருப்பதாகவும், ஜர்மானியத் தலைவர்க்கும் துருக்கியர்க்கும் மனப்பொருத்தம் ஸுகமாகவில்லை யெனவும் சமாசாரங்கள் கூறப்படுகின்றன. கிரீஸ் நகரத்து அரசன் இருதலைக்கொள்ளி எறும்புபோல் திண்டாடுகிறான். அவன் தனது மைத்துனனாகிய ஜர்மானியச் சக்ரவர்த்தியிடம் பகை கொள்ளவு முடியவில்லை; தன் நாட்டை முன் காத்துச் துருக்கியிடமிருந்து விடுவித்த ஆங்கில நாட்டிடம் சிநேஹமின்றி யிருக்கவும் முடியவில்லை. கிரீஸ்நாட்டில் ஸலோனிகா, கார்ப்யூ முதலிய இடங்களில் இங்கிலீஷ் துருப்புகள் பலப்படுத்தப் படுகின்றன; சிதைந்த ஸர்வியத் துருப்புகளும் சேர்த்துச் சீர்திருத்தப் படுகின்றன.

பல்கேரிய நாடு சும்மா இருக்கிறது. அதற்குக் கிரீஸ் மேலாவது, துருக்கிமேலாவது பகைபாராட்ட முடியவில்லை. ருமேனியாவோ, கண்கொட்டாது நடப்பதையெல்லாம் பார்த்துக்கொண்டே இருக்கிறது. ஆயினும், நேசத் துருப்பிடம் அபிமானத்துடனே விளங்குகிறதென்றே சொல்லவேண்டும். இடலிக்கும் ஆஸ்டிரியாவுக்குமிடையே நடக்கும் சண்டை எப்பொழுதும்போலே நடந்துகொண்டிருக்கிறது.

ஆசியத் துருக்கியில் எர்ஜரம் கோட்டையைப் பிடித்ததும், ரஷ்யசேனை இரண்டு பிரிவாகப் பிரிந்து முஷ், பிட்லிஸ் என்னும் பட்டணங்களை நோக்கிச்சென்றன. மூன்றாவது ரஷ்ய சைன்யம் செலிக் நதியைத்தாண்டி அடீனா என்னுமிடத்து இறங்கி, ரைஜ் என்னும் பட்டணத்தைக் கவர்ந்து, கடலோரமே நடந்து, டிரபிஜாண்ட் என்னும் ராணுவத் துறைமுகத்திற்குக் கீழ் 30 மைல் தூரத்திருந்த ஓபி என்னும் பட்டணத்தைக் கவர்ந்து முஷ் பக்கஞ்சென்ற சேனை அந்நகரைத் தகர்த்தது. கடல் மூலமாகவும் தரை மூலமாகவும் டிரபிஜாண்ட் துறைமுகத்தை நாடி அவ்வரண் நிறைந்த கோட்டையைத் தகர்த்துக் கவர்ந்தனர். ரஷ்யரது வெற்றி யிவ்வளவோடு நிற்கவில்லை. ஒரு தனிச்சேனை கார்மென்ஷா என்னும் இடத்திலிருந்து

துருக்கியரது பேரரண் தலமாகிய பாக்டாட் நகரத்தைத் தகர்க்கவும் அனுப்பிக்கப்பட்டது. அதன் வேலை விவரங்கள் இன்னும் தெரியவில்லை. இது குட் - எல் - அமாரா என்னுமிடத்திருக்கும் இந்தியத் துருப்பின் உதவிக்கெனவே நம்பப்படுகிறது.

துருக்கியின் முக்கியவரண் தலங்களாகிய எர்ஜரம், டிரபிஜாண்ட், பிட்லிஸ் முதலிய பட்டணங்களைப் பகைவர் கைக்கொண்டது, அதற்குப் பெருநஷ்டமே. ஆனால் அது சும்மா இருக்குமெனச் சொல்ல முடியாது. தமது தாழ்ந்த நிலையைப் போக்கிக்கொள்ள வேண்டிய ஸாதனங்களைச் செய்ய அதற்குக் காலதாமஸமாகாதிருக்க முடியாது.

நிற்க, கடற்படைச் சண்டை இது வரையிலும் நடக்கவில்லை. ஆனால் ஸப்மெரீன் சண்டை வேகங்குறையாமல், தயை தாட்சணியமில்லாமலே நடந்து வருகிறது. சண்டையிற் கலவாதவர்களுடைய வியாபாரக்கப்பல்களையும், போக்கு வரவுக் கப்பல்களையும் ஜெர்மனி துலைப்பது வர வர விருத்தியாகிக் கொண்டே வருகிறது.ஸமாசாரக் கப்பல்களை உடைப்பதற்குக் கொஞ்சமும் அது தயங்கவில்லை. ஸஸெக்ஸ் என்னும் கப்பல் விஷயமாய் அமெரிக்காக் கண்டத்து யுனைடைட் ஸ்டேட்ஸ் தலைவராகிய மிஸ்டர் வில்ஸன் மேற்படி அநீதமானயுத்தத்தை அவர்கள் ஒழிக்காவிடில், தன்னுட்டிற்கும்ஜர்மனிக்கும் நேசபாவத்திற்குத் தடை ஏற்படுமென ஜர்மானிய இராஜாங்கத்திற்குக் கண்டிதமான ஓலையனுப்பியதாகத் தெரியவருகிறது. அதற்கு ஜர்மனியின் பதில் என்னவென்று பின் கவனிப்போம்.

***

இம்மாசவாரம்பத்தில் கனம் நமது கவர்னர் ஜனரல் ஹார்டிஞ்ச்பிரபு தமது வேலையை விட்டுவிட்டுத் தமது ஜன்மதேசம் அடையப்போகின்றனர். அவரைப்பற்றி நாம் ஒன்றும் கூற வேண்டியதில்லை. அவரைக்கொண்டாடாதவர் எவருமில்லை. அவர் நம்மிடம் மிக அன்புடன் இருந்தவர். நம்மவர் செய்த சிறு பிசகுகளையும் கவனியாது நம்மிடம் அன்போடு விளங்கினவர். அவர் பெருமை நம்மிடம் அவர் கொண்ட அன்பினல்தான் அளக்கப்படும். தென் ஆப்ரிக்காவில் நம்மவர் பட்டப்பாட்டை நிவர்த்திக்க அவர் உழைத்ததைப்பற்றி நாம் சொல்ல வேண்டியதில்லை. கான்பூர்மஸூதிவிஷயத்திலும், வங்காளப் பிரிவை ஒழிப்பதிலும், இந்தியக்கூலிகள் வெளியேறுவதைத்தடுப்பதிலும் அவர் நடந்துகொண்டவிதம் இதுரை வந்த நமது ராஜப்பிரதிநிதிகள் ஒருவராவது நடந்ததாகச் சொல்லமுடியாது. நம் நகருக்கு வந்திருந்தபோது தென் ஆப்பிரிக்காவில் நம்மவரது நிலைமையைப்பற்றி அவர் உள்ளன்போடு வெளிப்படையாகப் பேசியதைப் பற்றி அவரோடு சேர்ந்தவரும் பிறரும் பலவிதமாகக் கூறியபோது அவர் "பொறுக்க முடியாது நான் வெள்ளையாகக் கூறியது நயமான மொழிகளில் அமைக்கப்படாவிடினும் நான் பேசிய விஷயம் தர்மத்திற்குட்பட்டது; ஆகையால் வெளிப்படையாகக்கூறினேன்" என்ற அவர் மொழிகளின் ஸத்தியத்தை அளவிடமுடியுமா? மேலும்அவருடையஉழைப்பினல்தான் காசிஹிந்து யூனிவர்ஸிடியும், மைசூர் யூனிவர்ஸிடியும், பீஹார் ஒரிஸ்ஸா மாகாணத்திற்கு ஆலோசனைசபையும் தேர்ந்தெடுக்கப்படும் சட்டஸபை அங்கத்தினரது மிகுதியும் ஏற்பட்டன. ஐக்கிய மாகாணத்திற்கென்று அவர் விரும்பிய ஆலோசனை ஸபையைப்பற்றிய தீர்மானம் சீமை லார்ட்களின் ஆலோசனை சபையில் ஆமோதிக்கப்படாதுபோயிற்று. ஆயினும் அவர் வரவர இந்தியர்களுக்கு ராஜாங்க விஷயங்களில் வன்மையுண்டாகச்செய்து அவர்களாலேயே இராஜ்யத்தையாளச்செய்து இந்தியாகவர்ன்மெண்டின்கீழேஅவா அடங்கியிருக்கவேண்டியதுதான் தருமமென்று இந்தியமந்திரிக்கு எழுதியமொழிகளும்,தான் இந்நாட்டிலிருந்து செலவு பெற்றுக்கொள்ளும்பொழுது 'நான் இங்கு இந்தியனகவே பாவித்து, அவர்க்காகவே உழைத்து, அவரிடமே வாழ்ந்தேன்' என்ற மொழிகளும் மழுங்காதென்றும் நமது மனத்தில் விளங்குமல்லவா?நமக்கும் அவரைப்பிரிவது மிகவும் வருத்தமாயினும் அவர் எங்கு இருப்பினும் அவர்க்குச் சுகமும் யசஸ்ஸும் தீர்காயுஸும் நீடித்து விளங்க விரும்புகிறோம்.

***

கனம் லார்ட் செம்ஸ்போர்ட் நமது இந்திய இராஜப் பிரதிநிதித்வத்தைப் பெற்றுக் கொண்ட தெவர்க்கும் பரமாநந்தமே. அவர் ஹார்டிஞ்ச்பிரபுவின் உறவினரெனவே தெரியவருகிறது. ஹார்டிஞ்ச் பிரபுவின் பாவங்களையே பின்பற்றி நம்மையாள்வதாக வாக்களித்திருக்கின்றனர். அவருடையராஜ்யபாவம் முழுதும் இப்பெரும் எண்ணத்துடனே விளங்குமென நம்புகிறோம். அவர்க்கு ஆங்கில ராஜாங்க அநுபவமல்லாமல் லோக அநுபவமும் அதிகம். அவ்வநுபவங்களை இந்தியரது நன்மைக்குபயோகித்து, தனது பெருமையையும் கருணையையும் வளரச்செய்து, அன்போடு விளங்கக் கடவுள் அநுக்ரஹிப்பாராக. இந்திய நாடுமுழுதும் அவரைத் தம்பதி ஸமேதராக அன்போடு வரவேற்பதைப் பஹிரங்கமாகச் சொல்லவும் வேண்டுமா?

***

மைஸூர் ஸம்ஸ்தானத்திற்கு ஒரு தனி ஸர்வகலா சங்கம் ஏற்பட்டது படித்தவரனைவர்க்கும் ஸந்தோஷத்தை யுண்டாக்கும் என்பதற்கு ஐயம் இல்லை. இதற்கு அந்த ஸமஸ்தானத்தின் திவானாக இருக்கும் ஸர் எம். விச்வேச்வரய்யா அவர்களே மூலாதாரம். மைஸூர் ராஜாங்கம் பல நாளாகக் கேட்ட இந்த அபீஷ்டத்தை ஏளனஞ்செய்யாது லார்ட் ஹார்டிஞ் பிரபுவே பூர்த்திசெய்தனர். இதன் நடவடிக்கைகள் முதலியன முற்றும் விரிவாக ஏற்படவில்லையாயினும், பொதுவாக இந்தியாகவர்ன்மெண்டார் ஸர்வகலா ஸங்கஸ்தாபனத்தை ஒப்புக்கொண்டார் எனத் தெரிகிறது. இதில் பி. ஏ. பி.எஸ்ஸி, எம். ஏ., எம். எஸ்ஸி, என்னும் படிப்புப் பட்டங்களும், பி. டி., என்னும் உபாத்தியாயர் பட்டமும், டாக்டர் ஆவ்-லிட்டெரிச்சர், டாக்டர்- ஆவ்-ஸைன்ஸ என்னும் கௌரதா பட்டங்களும் அளிக்கப்படும. ஆரம்பத்தில் வியவஹார ஸம்பந்தமான படிப்பை இந்த ஸர்வகலா ஸங்கத்தின்கீழ் கொண்டுவருவது முடியாதாயிருக்குமென மைஸூர் தர்பார் அபிப்பிராயப்படுகிறது. இந்த ஸங்கத்தில் இந்திய பாஷையிடம் கவனம் இங்கிலீஷ் பாஷையிடம் போலே நடத்தப்படுமென்பது யாவர்க்கும் இன்பந்தரும். தத்காலம் கன்னடபாஷையையும், ஹிந்துஸ்தானியையுந்தான் கவனிக்கப்படு மென்றும் தெரியவருகிறது. இந்த சங்கஸ்தாபனம், மைஸூர் ஸம்ஸ்தானத்தில் படிப்பை விருத்திசெய்யப் பெருமியக்கந் தருவதல்லாமல், ஜனங்களுடைய புத்தியை விசாலிப்பதற்குமிடந்தரும். இதில் 'ஹானர்ஸ்' படிப்பில்லாமையும், தேசபாஷைக்குப் பிரதானங் கொடுத்ததும், போதிக்குங் கலாசங்கங்களைப் பெரும்பான்மை தழுவியிருத்தலும் உத்தம லக்ஷணங்களென யாவருமதிப்பர். இனி அந்நாட்டு வாலிபர்க்குப் படிப்பைப்பற்றித் தூண்டுதல் வேண்டுமோ? ஆலமரம் பழுத்ததென்று பறவைக்கு யார் சீட்டனுப்ப வேண்டும் ?

***

ஸப் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர்களுடைய தணிக்கைப் பிரயாணங்களில் வாங்கக்கூடிய பத்தாவைப்பற்றிய சில கஷ்டங்களை நீக்கும்படியாகக் கவர்ன்மெண்டார் 'பிரயாணத்தில் செலவிட்ட தினத்தின்' அளவைப் பற்றிய நிருபணத்தை மாற்றியதற்குக் கனம் வி.எஸ். ஸ்ரீநிவாஸ சாஸ்திரியாருக்கு ஸப் அஸிஸ்டன்ட் இன்ஸ்பெக்டர்கள் யாவரும் கடமைப்பட்டவராவர். இம்மாற்றத்தினால் பிரயாணபத்தா விஷயத்தில் மற்றைய உத்தியோகஸ்தர்களுடைய அந்தஸ்தையே கிட்டத்தட்ட இவர்கள் அடைந்திருக்கின்றனர். காலஞ் செல்லச் செல்ல மற்றுமுள்ள அல்பபேதங்களையும் கவர்ன்மெண்டார் மாற்றுவர் என்பது திண்ணம்.

***

காகிதத் தொழில் முன்பு நம் நாட்டிலும் சீன நாட்டிலுமே நடந்துவந்தது. முற்காலத்தில் பாஞ்சாலம், காச்மீரம், வங்காளம் இந்நாடுகளில் இத்தொழில் மிக ஓங்கிவிளங்கியது. ஆனால் அப்பொழுது கந்தைகளின் மூலமாகக் காகிதங்கள் செய்யப்படவில்லை. மொகலாயர் குடியேறிய பிறகே, அது நம்மவரால் கற்றுக்கொள்ளப்பட்டது. அன்றுமுதல் அத்தகைய காகிதத்தொழில் இந்தியாவில் குறையாமலே நடந்துவந்தது. பின் ஐரோப்பிய நாடுகளிலிருந்து காகிதங்கள் வர ஆரம்பித்ததுமுதல் நமது தொழில் பிரமுக

மாகத் தலையெடுத்து விளங்கமுடியவில்லை; ஆனால் முற்றுமொழிந்தும் போகவில்லை. இந்தியர்களால் கையால் செய்யப்பட்ட காகிதங்கள் உறுதியானவையாயும் நெடுங்காலம் அழிவின்றி விளங்கக் கூடியனவையாயும் விளங்குவதே இதற்குக்காரணம். தற்காலம் யுத்தத்தின் பயனாக காகிதக்ஷாமம் உண்டாயிருப்பது யாவருமறிவர். இம்மாதம்சென்னை மஹாஜனஸபைக் கூட்டத்தில் நடந்த இந்தியத் தொழிற்சங்க மீட்டிங்கில் ஸ்ரீ கரியப்பா என்பவர் பேசியகாலத்து, இந்தியாவில் காகிதத்தொழில் விருத்தியாவதற்கு ராஜாங்கபோஷணை அத்யாவச்யகமென்று பேசினார். ஜனங்களும் ராஜாங்கமும் போஷித்தால்தான் காகிதத்தொழில் விருத்தியடையும். அதைவிருத்தி செய்வதற்கு இதுவே ஸமயம். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ளவேண்டுமல்லவா?

* * *

பர்மாவுக்குஓர் தனி ஸர்வகலாசங்கம் ஏற்படுத்துவதைப்பற்றிப் பர்மா கவர்ன்மெண்டுக்கும் இந்தியா கவர்ன்மெண்டுக்கும் நடந்த கடிதங்கள் வெளியிடப்பட்டிருக்கின்றன. பர்மா லெப்டினன்ட் கவர்னர், ஷை ஸங்கமானது இந்தியாவில் நடைபெறும் மற்றைய ஸங்கங்களைக் காட்டிலும் பெருமை வாய்ந்ததாயும், பர்மாவுக்கு வேண்டிய ஸர்வவிதப் படிப்பைகரதலாமலகமாகஅனுபவத்துடன் கொடுக்கக்கூடியதாக இருக்கும்படியாகவுஞ் செய்யவேண்டியதென்றும்,அவ்வாறு செய்வதற்குத் தக்கவாறு, இலக்கியம், தொழிற்கல்வி, சட்டம், சாஸ்திரம், சிற்பம், வைத்தியம்,மிருகவைத்யம், கட்டிட அமைப்பு, வியாபார தத்வம், ரஸாயனாதி சாஸ்திரம், உழவுநூல் முதலியவைகளில் கவனம் செலுத்துவதுடன்,உடனுக்குடனே பிரயோஜனமிருக்கும்படியாகப் பயிற்சியுடன்கூடிய கலாசாலைகளையும் ஏற்படுத்தவேண்டும் என விவரித்திருக்கின்றனர். இந்தியா கவர்ன்மெண்டாரும் பொது அபிப்பிராயங்களைப் பெறுமாறே கடிதங்களைவெளியிட்டிருக்கின்றனர். பர்மா லெப்டினன்ட் கவர்னர் அவர்களுடைய நோக்கம் மிகச் சிறந்தது: அதுவே அதன் ஸித்திக்கு அறிகுறியாகும்.

* * *

அம்பாலாநகரத்துமேலிந்தியாக் கண்ணாடி வேலை சாலையின் முதலாளியுங் காரியஸ்தருமான வார்ஷ்ணே என்பவர், அமெரிக்கா, ஜப்பான், ஜர்மனி முதலிய தேசங்களுக்குச் சென்று ரஸாயன சாஸ்திரத்தைத் தீவிரமாகக் கற்றவர். முக்கியமாகக் கண்ணாடியின் விவரத்திலேயே கவனமுற்றுஞ் செலுத்தினவர். தான் மீண்டும் தன்னாடு அடைந்து, சிறந்த கண்ணாடிச் சாலை வைக்க வேண்டுமென்ற ஆவலுடன் உழைத்தவர். அவர் தன் நாட்டை யடைந்ததும் மேற்சொன்ன கண்ணாடிச் சாலையை ஏற்படுத்தி நன்றாக நடத்தி வருகிறார். அவர் "இதுவரையும் 24 கண்ணாடி வேலைச் சாலைகள் ரஸாயான ரீதியாகப் புதிதாக ஏற்பட்டிருப்பினும், தான் ஏற்படுத்திய இரண்டு தவிர மற்றெல்லாம் க்ஷீணித்தழிந்தன" என்று கூறியதாகச் சொல்லப்படுகிறது, அவரது காரிய சித்திக்குக் காரணங்கள், அவர் இந்தியத்தொழிலாளிகளுக்குக் கற்றுக்கொடுக்கும் திறமையும், அவர் தான் படித்த காலத்தில் தனது உபாத்தியாயர்கள் சொல்லாது ஒளித்த உள்ளுளவுகளைத் தந்திரமாகக் கொள்ளைகொண்டுதானே உழைத்த அனுபவமுமாகிய இரண்டே என அவர் வெளியிட்டிருக்கிறார். இந்தக் கண்ணாடிச்சாலைகள் அழிந்ததின் காரணம் முதலாளிகள் தொழிலாளிகளை அமவதித்தலும், மேஸ்திரிகள் அத்தொழில் கீழ்வேலைக்காரரை அவமதித்தலுமே. வார்ஷ்ணேயர் 40-பேரைக் கண்ணாடிவேலையை ஐரோப்பியச் சமர்த்தர்களிடம் நன்கு கற்கும்படிச் செய்திருக்கின்றார். தொழிலாளிகளை அதிகப்படுத்துவதேஅவர்க்குப்பேரவா. சில நாட்களுக்கு முன் இங்கிலாந்து, ஜர்மனி நாடுகளிற்கற்ற கண்ணாடி வேலைச்சமர்த்தரொருவர், கண்ணாடிவேலைஇந்நாட்டில் நிலைக்க இடமில்லையென்றும், இந்த பூமியதற்கு ஒற்றுக்கொள்ளாதென்றும், தீர்ந்த அபிப்பிராயத்தை வெளியிட்டனராயினும், வார்ஷ்ணேயர் இந்நாடே இவ்வேலைக்குகந்த நாடெனச்சொல்லுவதோடு,விளக்கியுங்காட்டுகின்றனர். இந்தியாவுக்கு $1\frac{1}{2}$ கோடிரூபாய்க்குமேல் கண்ணாடிச் சாமான்கள்வெளிநாடுகளிலிருந்து வருகின்றன. வார்ஷ்ணேயர் ஏற்படுத்திய சாலைபோல் 150 சாலைகள்

இருந்தால் வெளிநாட்டிலிருந்துகண்ணுடிகள் நமக்கு வரவேண்டியதே இல்லை. அம்பாலா நகரத்துச்சாலையில் விளக்குச் சிம்னிகளே செய்யப்படுகின்றன. இன்னும்பலவித சாலைகள் சாளரக்கண்ணுடிகள், மணிகள், வளையல்கள், கண்ணுடிஆயுதங்கள்பாத்திரங்கள் முதலியசெய்ய ஏற்படுவதற்கு இடமிருக்கின்றது. கண்ணுடி செய்வதற்குவேண்டிய சோடா உப்பு,கடலுப்பிலிருந்தாவது பொட்லுப்பிலிருந்தாவதுசெய்யலாம். இவைநமது நாட்டில் ஏராளமாய்க் கிடைக்கும். அவ்வாறு செய்வதால் உப்புத்ராவகமும் ஏராளமாகக் கிடைக்கும். சோடா, உப்புத்திராவகம்,கந்தகத் திராவகம் இவற்ருல் அநேக தொழில்கள் விருத்தியாக இடமுண்டு. பலரும் கண்ணுடிச்சாலைகள் ஏற்படுத்தினுல் மற்றுந் தொழில்கள் உண்டாக இடமுண்டு.

***

மைசூர் ராஜ்யத்தில் பாலபோதனுப் படிப்புக் கட்டாயப் படுத்தும்படியாகத் தீர்மானப் படுத்தப்பட்டது, அவ்விராஜ்யத்தின் பெருமைக்குப் பெருமைதரும். இருள்மூடிய நிலத்தில் வெளிச்சத்தை யுண்டாக்குவதெவர்க்குமானந்தமே. இந்திய கவர்ன்மெண்டாரால், நடத்தையில் கொண்டு வர முடியாதுபோன பாலபோதனு கட்டாயப்படிப்பு இரண்டு இந்திய ராஜாங்கங்களில் இப்பொழுதுஅமுலுக்குக்கொண்டுவரப்பட்டது. மைசூர் ஸம்ஸ்தானத்தில் ஒரு ஸர்வகலாசாலை மிக வுபயோகமாக ஏற்படுத்த நடவடிக்கைகள் நடந்துவருகின்றனவென்று முன்னெழுதினேம். இப்பொழுது கட்டாயப்படிப்பு மேற்படுத்தப்பட்டது அந்நாட்டில் அஞ்ஞான இருள் ஒழிய, ஞானேதயமானதாகுமல்லவா?

***

பிரஞ்ச்இந்தியாவில் இந்தியர்கள்,பிரன்சுக்காரர்களுடையஎல்லாச்சுதந்திரங்களுடனும் சேனையில் சேரலாமென விளம்பரப்படுத்தியது ஜனங்களுக்கு மிகச்சந்தோஷத்தைக் கொடுத்தது. நமது கவர்ன்மென்டாரும் ஆங்கில இந்தியர்களைத் தனி ரெஜிமெண்டாக ஏற்படுத்தும்படிச் செய்தது ஆனந்தத்தைக் கொடுக்கினும், நமது மற்ற இந்தியர்க்கும் நல்லகாள் என்றுவரும் எண்ண ஏங்கச்செய்கிறது. இந்தியர்களுக்கு ராணுவத்திலும் நன்னிலையடையும்படிச் செய்வது கவர்ன்மெண்டார் கடனேயாகும். அவ்வாறு செய்வது கவர்மெண்டாருக்கும் பெருமை, நமக்கும் கீர்த்தியாகும்.

***

பம்பாய்ப் பஞ்சாலைக்கூட்டங் கூடியபோது, சண்டைக்குப்பிந்தி தொழில் விருத்தியைப்பற்றிச் செய்யவேண்டிய கார்யங்களைப் பெடிட் என்பவர் ஸங்க்ரஹமாகக் கூறியதாவது:—

(1) தொழில்களை எவ்வாறு செய்ய வேண்டுமென்பதைக் காட்ட இராஜாங்கத்தாராலேயே மாதிரிஆலைகள் ஏற்படுத்தல்;

(2) கவர்ன்மெண்டார் தமது செலவைக் கொண்டு சாஸ்திரீயமான தொழிலில் சமர்த்த ஞானத்தை ஏற்படுத்துவதுடன் அப்போதைக்கப்போது தக்க புத்திபுகட்டுதல்;

(3) முதல் முதல் செய்யவேண்டிய காரியங்களையும் ஆராய்ச்சி வேலையையும் கவர்ன்மெண்டாரே நடத்தல்;

(4) அந்தந்தத் தொழிலின் நிலைக்கேற்றவாறு, அவ்வத்தொழிலின் அபிவிருத்திக்கேற்ப பொருளுதவி செய்யும்படியாகக் கவர்ன்மெண்டின் வருமானச் செலவமைக்கப்படுதல்.—

என்பவையே. இந்திய கவர்ன்மெண்டாரும், தேசியத் தொழில்களின் மொத்தக்கணக்கை எடுப்பதாக இருப்பதால், அதனுல் மேற்சொன்னபடி நமது தொழில்கள் புதிது புதிதாகக் கிளம்பி விருத்தியடையவும்,இருப்பவை நீடித்தோங்கவும் இடமுண்டாக வேண்டுமென்று யார் வேண்டார்?

***

கனம் ஸர் ஹாரஸ் ப்ளேங்கேட் அவர்கள், இந்தியத்தொழில் 'கமிஷனில்' அங்கத்தினராக ஏற்படுத்தப்பட்டது யாவர்க்கும் ஸந்தோஷம் விளைவிக்கும். அவர் ஐயர்லாந்தில் ஐக்கிய நாணயவிஷயங்களிலும், கிருஷிகிருஷிகர்கள் விஷயங்களிலும் உழைத்த அநுபவசாலி; கிட்டத்தட்ட நமது நாட்டு உழவு விஷயங்களைப் போன்ற விஷயங்களில் உழைத்தவர். இங்கு அவரது வரவு

நன்மைக்கே இடந்தரும். ஏனெனில் பயிருந் தொழிற்கல்வியும் ஒன்றிற்கொன்றுதவியாகவேண்டிய தல்லவென்று, தவறெண்ணங் கொண்டார் கூறினும், கனம் ஸர் ஜேம்ஸ் மெஸ்டன் அவர்கள் இந்தியாவைப் பற்றிப் பேசியபோது, "குடிகள் கஷ்ட மொழிந்து, ஸுகத்தோடு விளங்கி, க்ஷாம பீதி யழிந்து, உழவுநூல் சாஸ்திரமிவற்ருல் பச்சைப் பசேல் என்று பயிர் தவழ்ந்த கிராமவாஸம், இப்போதைய விளைவினும் பல மடங்கதிகம் விளைந்து விளங்கவும், அதற்கின்றியமையா தமைய பெரும் பட்டணங்கள் யந்திரங்களின் ரீங்காரம் தவழ்ந்தும், மின்ஸார வாலைகளின் பரபரப்பு குலாவி சுக வாழ்வுள்ள கிராம வாஸத்திற்குவேண்டிய சுகத்திற்கு ஏற்ற எல்லாப்பொருள்களையும் வெளியிட்டுவிளங்கவும், இவ்விந்தியா இன்றைக்கிருக்கு நிலையினும் ஓங்கி விளங்கக் காண்கிறேன்" என்றவாறு உழவும் தொழிலும் குலாவி விளங்க உழைப்பர் என நம்புகிறோம்.

---

பெரிய மனிதர்கள்.—சில பெரியமனிதர்கள் ஏழைகளைக்கண்டால் பேசுகிறதில்லை. அவர்கள் வருந்தியழைத்தாலும் போகிறதில்லை. இன்னும் சிலர் ஏழைகளைப்பார்ப்பது கூட தங்கள் கௌரவத்துக்குக் குறைவென்று அவர்களுக்கெதிரில் விறைத்த பிணம்போல் முகத்தை அப்பால் திருப்பி நடப்பதுண்டு. இப்படி செய்வதெல்லாம் அவிவேகமே யன்றி வேறல்ல. ஜடப்பொருளாகிய கல்லையும், மண்ணையும், குட்டிச் சுவரையும் பார்க்கும் கனவான்கள் ஏழைகளைக் கண்டால் மூஞ்சியைத் திருப்பி கொள்வானேன்? தான் செய்யும் தர்மங்களை யேற்றுக்கொண்டு, தனக்குப்புண்யத்தை விளைவிக்கும் ஏழைகளிடம் தனவந்தர்கள் நன்றிபாராட்டுவ தவசியம் அவர்களைக் கண்குளிர நோக்கி அவர்களது மனம் குளிரப்பேசி நற்பெயரெடுப்பது நலம். சீமையில் பிரதான மந்திரியாயிருந்த மிஸ்டர் கிளாட்ஸ்டனும் அவர் மனைவியும் ஏழைகள் செய்யும் விருந்துக்கும் கல்யாணத்துக்கும் ஒருதரம் கூப்பிடுவதற்கு முன்னேபோகிறது வழக்கம் கிளாட்ஸ்டன் தன்னுடைய 85-வது வயதில் தமது வேலைக்காரன் வீட்டுக் கலியாணத்தில் அவனுடன் ஸமபந்தியாயிருந்து போஜனமுண்டார். அவரல்லவா பெருமைக்குரியவர்?

# விசேஷக் குறிப்புகள்

## NEWS AND NOTES

அமெரிக்கா யூனிவர்ஸிடிகளில் இந்தியரின் பிரசங்கம்.—ஸர் ரவீந்திரநாத் தாகூர் கல்வி கேள்விகளிற் சிறந்த மேதாவி. இவர் அமெரிக்கா யூனிவர்ஸிடிகளில் 18 பிரசங்கங்கள் செய்ய அமெரிக்கர்களால் அழைக்கப் பெற்றிருக்கிருர். இப்பதினெட்டு பிரசங்கங்களுக்குமாக அவருக்கு 42,000 ரூபாய் கொடுப்பதாகஅவர்கள் ஒப்புக்கொண்டிருக்கிருர்கள்.

***

கௌதமபுத்தரின் விக்கிரஹமும், ஒரு பெரிய மணியும் அகப்பட்டன.—வெண்கலத்தில் செய்யப்பட்ட கௌதம புத்தரின் விக்கிரஹம் ஒன்றும், சுமார் 100 பவுன் நிறையுள்ள ஒரு வெண்கல மணியும் சென்னை துறைமுகத்திற் கருகில் கிணறு தோண்டப்படும்பொழுது இம்மாதம் 16உ அகப்பட்டன. இந்த விக்கிரஹமும், மணியும், கிளைவ் பாட்டரியில் மிஸ்டர் ரிச்சார்ட்ஸ் பங்களாவில் காட்சிப் பொருள்களாக வைக்கப்பட்டிருக்கின்றன. அவைகளைப் பார்க்கப் பிரியப்படுகிறவர்கள் சிறிய தொகை கொடுக்க வேண்டும். அவ்விதம் வசூலாகும் தொகை யுத்த நிதிக்குச் சேர்ப்பிக்கப்படும்.

***

மைசூர் ஸமஸ்தானம்.—இதன் விஸ்திர்ணம் சுமார் 30,000—சதுரமைலாகும். அதன் ஜனத்தொகை சுமார் 60 லக்ஷம். ஜனங்களில் பெரும்பாலரும் பேசிவரும் பாஷை கன்னடம். அந்த ஸமஸ்தானத்திலே முதல் கிரேட் கலாசாலைகள் இரண்டு உண்டு. அவ்விரண்டிலுமாக சுமார் 800 மாணவர்கள் கல்வி பயின்றுவருகின்றனர். தவிர, 14 ஹைஸ்கூல்கள் இருக்கின்றன. அவைகளில் 2,700 பிள்ளைகள் படித்துவருகிருர்கள். மேலும், போதனு முறைக் கலாசாலை யொன்றும் இருக்கிறது.

***